இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 79– திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 11– சனிக்கிழமை 28 அக்டோபர் 2023 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 79 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 11 - Saturday 28 October 2023 - Dak 16 Pages ₹ 5.00

## நீட் விலக்கு மசோதாவிற்கு

# உடனே ஒப்புதல் வழங்குவீர்!

## குடியரசுத் தலைவரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வலியுறுத்தல்!



இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, புதுதில்லி புறப்பட்டுச் செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் நேற்று (27.10.2023) வழியனுப்பி வைத்து, தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு 2021க்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென வலியுறுத்தி இதுதொடர்பாக தான் எழுதிய கடிதத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

**சென்னை, அக்.28-**

**“தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு மசோதாவிற்கு, மேலும் தாமதமின்றி உடனடியாக ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காத்திட வேண்டும்” - என்று சென்னை விமான நிலையத்தில் இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.**

சென்னை, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, டெல்லி புறப்பட்டுச் செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் நேற்று (27.10.2023) சந்தித்தார். அப்போது, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ள, தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு 2021க்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென நேரில் வலியுறுத்திய முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, நேற்று (27.10.2023) தான் எழுதியுள்ள கடிதத்தையும் வழங்கினார்.

### பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நீட் தேர்வு எதிரானது!

அக்கடிதத்தில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) அடிப்படையிலான மாணவர் சேர்க்கை, ஏழை மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றதாகவும், இந்தச் செயல்முறை கடந்த காலங்களில் மாநிலத்தில் நல்ல பலன்களை அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசு நீட் தேர்வை அறிமுகப்படுத்தியதாலும், அதைத் தொடர்ந்து ஒன்றிய சட்டங்களில் செய்யப்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாகவும், ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் நடைபெற்ற சேர்க்கை முறை நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

> **“ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய கேள்விகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இது வரை இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலை உள்ளது.”**

நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகளை ஆராய்ந்து, மாற்றுவழிகளை செயல்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட நியமிக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையிலான குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையிலும், பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.9.2021 அன்று ‘தமிழ்நாடு இளநிலை மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2021’ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) நிறைவேற்றப்பட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு 18.9.2021 அன்று அனுப்பப்பட்டதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்கள் ஐந்து மாத காலத்திற்குப் பிறகு, மேற்படி சட்டமுன்வடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழ்நாடு அரசுக்குத் திருப்பியனுப்பிய நிலையில், 8.2.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறவேண்டி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### ஒன்றிய அமைச்சகத்துக்கு உரிய முறையில் விளக்கம்!

பின்னர், மேற்படி சட்டமுன்வடிவு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவு தொடர்பாக ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஒன்றிய உயர்கல்வித் துறை, ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஆயுஷ் அமைச்சகம் கோரிய அனைத்து விளக்கங்களும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு உரிய காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ளதாக தேதிவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் போதிய விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகும் இந்த விஷயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாததால், இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, 14.8.2023 அன்று தான் கடிதம் எழுதியிருந்ததாகவும்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## 5 மாநில தேர்தல் முடிவுகள் மூலம்

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கு வரும்!

## திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.28-**

**சென்னை - இராணி மெய்யம்மை அரங்கில், நேற்று காலை, கழக வழக்கறிஞர் ஏ.என்.புருஷோத்தம் புதல்வியும் - 84வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டாக்டர் ஏ.பி. பூர்ணிமா - கே.ஏ.இராதாகிருஷ்ணன் ஆகியோரின் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “விரைவில் நடைபெறவுள்ள 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் மூலம், ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கு வரும்!” என்று குறிப்பிட்டார்.**

சென்னையில் நேற்று (27.10.2023) நடைபெற்ற வழக்கறிஞர் ஏ.என்.புருஷோத்தம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று மணவிழாவை நடத்திவைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

இன்று நடைபெற்றிருக்கக்கூடிய இந்த திருமணம், சீர்திருத்தத் திருமணமாக, சுயமரியாதை உணர்வோடு நடைபெற்றிருக்கக்கூடிய திருமணமாக நடந்தேறியிருக்கிறது. இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெறுகிற நேரத்தில், அதிலும் குறிப்பாக நாம் வாழ்த்துகிற நேரத்தில் ஒன்றை தவறாமல், மறக்காமல், வழக்கமாக, வாடிக்கையாக வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய ஒரு செய்தியை நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். என்ன அந்த செய்தி என்று கேட்டால், இது போன்ற சீர்திருத்தத் திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை நாம் பெற்றிருக்கவில்லை. சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

### சுயமரியாதைத் தமிழ் திருமணம்!

அந்த நிலையை மாற்றிட வேண்டும் என்பதற்காகத்தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்று ஆட்சியின் தலைவனாக தமிழக முதல்வராக சட்டமன்றத்திற்கு உள்ளே முதன்முதலாக நுழைந்து, சீர்திருத்தத் திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை அன்றைக்கு அண்ணா அவர்கள் பெற்றுத்தந்தார். ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்தத் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்திருத்தத் திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணம் மட்டுமல்ல, ஒரு தமிழ் திருமணம். இன்னும் பெருமையோடு சொல்லவேண்டும் என்று சொன்னால், நம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு செம்மொழி என்னும் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். எனவே அந்த அங்கீகாரத்தோடு இது ஒரு தமிழ்த் திருமணமாக நடந்தேறியிருக்கிறது. அது எல்லோருக்கும் மகிழ்ச்சி. அப்படிப்பட்ட இந்தத் திருமணத்தில் நாம் எல்லாம் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு மணமக்களைத் தமிழ் உணர்வோடு வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

### புருசோத்தமின் இயக்கப் பணிகள்!

நம்முடைய கழக வழக்கறிஞரான அருமைச் சகோதரர் புருஷோத்தம் அவர்கள் அவரைப் பற்றிப்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

ஆர்.எஸ்.எஸ். ரவி



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 28-10-2023

# தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் 2

இன்றைக்கு தமிழ்நாட்டில் பார்க்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான மணிமண்டபங்கள் - சிலைகள், பெரும்பாலும் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்டவை.

- ★ **பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை!**
- ★ **பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது!**
- ★ **பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம்!**
- ★ **மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்!**
- ★ **தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபம்!**
- ★ **வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி!**
- ★ **வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது!**
- ★ **விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவச பேருந்துப் பயணம்!**
- ★ **தியாகிகள் மணிமண்டபம்**
- ★ **சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்!**
- ★ **பூலித்தேவன் நினைவு மண்டபம்!**
- ★ **தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!**
- ★ **மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!**
- ★ **நேதாஜிக்கு சிலை!**
- ★ **கக்கனுக்கு சிலை!**
- ★ **சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண்!**

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த வரிசையில் இன்றைய திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் விடுதலைப் போராட்ட வீரர்களைப் போற்றி வருகிறார்.

★ சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு பெருவிழாவைக் கொண்டாடும் வகையில் ஏராளமான விழாக்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

★ செக்கிழுத்த செம்மல் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டார். வ.உ.சி. நூற்றாண்டு மலர் 'தமிழரசு' சார்பில் வெளியிடப்பட்டது. வ.உ.சி.யின் நூல்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி பெரிய கார்டன் சாலை, வ.உ.சி. சாலை என மாற்றப்பட்டது. ஒட்டப்பிடாரம், நெல்லை மண்டபங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. வ.உ.சி. மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மகாகவி பாரதியார் மறைந்த நூறாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தார். கடந்த ஆண்டு முழுவதும் பாரதி விழா நடத்தப்பட்டுள்ளது. பாரதியார் பிறந்த நாளை 'மகாகவி நாள்' என அறிவித்தோம். மாநில அளவில் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. 'பாரதி இளம் கவிஞர்' விருது வழங்கப்பட்டது. பாரதி ஆய்வாளர்களுக்கு விருதும், பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன. பாரதியார் இல்லத்தில் வாரம் தோறும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரப் பூங்காவுக்கு பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. பாரதி நினைவு நூற்றாண்டு மலர் 'தமிழரசு' சார்பில் வெளியிடப்பட்டது.

★ உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பராமரிக்கவும் புதுப்பிக்கவும் அரசு சார்பில் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டது.

★ கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

★ கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

★ விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த 3. 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தனது வாழ்நாளில் 20 முறை தமிழகம் வந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணில் இருந்து தான் காந்தியடிகள் எடுத்தார்கள். இதன் அடையாளமாக சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலையை அமைத்து, அதனை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

★ இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதம்தோறும் தியாகிகளுக்கான நிதிக் கொடையை தொடர்ந்து வழங்கி வருகிறது, தமிழ்நாடு அரசு.

★ விடுதலைப்போராட்டத்தின் பவள விழாவை ஒட்டி, கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூபாய் 18 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 9 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தியுள்ளது.

★ அதுபோல் விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித் தோன்றல்களுக்கு தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறது நம் அரசு.

★ விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து, 11 ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை கடந்த ஆகஸ்ட் 15 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இவை எதையும் தெரிந்துகொள்ளாமல் பொத்தாம் பொதுவாக, விடுதலைப் போராட்ட வீரர்களை மறைத்து விட்டார்கள் என்று சொல்வது அறியாமை ஆகும்.

**1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. 1967க்கு முன்னதாக தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக இருந்த நினைவு மண்டபம் என்பவை மூன்று.**

**சென்னை காந்தி மண்டபம் 27.1.1956 அன்று அமைக்கப் பட்டது. கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபமானது 30.5.1956 அன்று அமைக்கப்பட்டது. ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவர்களது இல்லம் நினைவு இல்லமாக மாறிய நாள் 7.8.1957 ஆகும். இவை மூன்றுதான் இருந்தன.**

**1967 ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான் அனைத்துத் தியாகிகளுக்கும் ஆண்டுதோறும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியிலும் தியாகிகள் போற்றப்பட்டார்கள் என்றாலும், அதிகமான நினைவுச் சின்னங்களை எழுப்பியவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.**

பாரதி வாழ்ந்த எட்டையபுரம் வீட்டை அரசு இல்லமாக தி.மு.க. அரசு ஆக்கி ஐம்பது ஆண்டுகள் (12.5.1973) ஆகிவிட்டன. மொத்த தியாகிகளுக்கும் சேர்த்து தியாகிகள் மணிமண்டபத்தைக் கட்டியவர் கலைஞர். தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவகம் அமைத்த நாள் 13.8.1971.

சுதந்திர தினப் பொன்விழா நினைவுத் தூணை 1997 ஆம் ஆண்டும், குடியரசு பொன்விழா நினைவுத்தூணை 2001 ஆம் ஆண்டும், சிப்பாய் புரட்சி நினைவுத் தூணை வேலூரில் 1998 ஆம் ஆண்டும் திறந்து வைத்தவர் முதலமைச்சர் கலைஞர்.

**கிண்டி ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு 'துக்ளக்' அரைகுறை வாசகர்கள் சொல்வதைக் கேட்டுப் பேசி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தனக்குத் தரப்பட்ட வேலைகளை ஒழுங்காக முதலில் பார்க்கவும்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2023) சென்னையில் நடைபெற்ற வழக்கறிஞர் ஏ.என். புருஷோத்தம் அவர்களின் மகளும், 87வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டாக்டர் ஏ.பி.பூர்ணிமா – கே.ஏ.இராதாகிருஷ்ணன் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.தாயகம் கவி, மூத்த வழக்கறிஞர் விடுதலை, துணை மேயர் மு.மகேஷ் குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ்

# தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ரூ.2,697 கோடியை உடனே விடுவிப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, அக். 28-**

**தமிழ்நாட்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்கான ரூ.2,697 கோடியினை உடனடியாக விடுவிக்கக் கோரி, ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 26.10.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது, கிராமப்புறங்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குவதற்கான முக்கியமான திட்டங்களில் ஒன்று என்பதையும், இந்தத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதோடு, கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்திட ஏதுவான நீடித்த மற்றும் நிலையான கிராமப்புற சொத்துகளை உருவாக்கிடும் மற்றும் கிராமப்புற மக்களின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்திடும் ஒரே திட்டமாகும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தமிழ்நாடு எப்போதும் சிறந்த மாநிலமாகத் திகழும்!**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில், பல்வேறு அளவுகோல்களின் கீழ் தமிழ்நாடு எப்போதும் சிறந்த மாநிலமாகத் திகழ்வதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 92.86 இலட்சம் குடும்பங்களுக்கு பணி அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில், 76.15 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 91.52 இலட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் புள்ளிவிவரங்களுடன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் விவசாயம், தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையில், இவற்றில் மாறுபாடுகள் ஏற்படும் சூழலில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்கு அதிகத் தேவை ஏற்படுவதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், கிராமப்புறங்களில் உள்ள முதியோர்கள், ஆதரவற்ற பெண்கள், குடும்பத் தலைவிகள், மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கு முக்கியமானதொரு வாழ்வாதாரமாகவும், குறிப்பாக விவசாயம் நலிவடைந்த பருவத்தில், கிராமப்புறங்களில் உள்ள பலருக்கு கூடுதல் வாழ்வாதார வாய்ப்பாகவும் கருதப்படுகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதாலும், அவர்களின் வங்கிக் கணக்கில் ஊதியம் வரவு வைக்கப்படுவதாலும், அவர்களின் நிதிநிலை மற்றும் வாழ்வாதாரம் பெரிதும் மேம்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**31.15 கோடி மனித நாட்களை தமிழ்நாடு எட்டியுள்ளது!**

தமிழ்நாட்டில், 2023-2024 ஆம் ஆண்டில் 40 கோடி மனித நாட்கள் தேவைப்படும் நிலையில், இதுவரை, 28 கோடி மனித நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், 23.10.2023 வரை, 66.26 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 76.06 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியதன் மூலம், தமிழ்நாடு 31.15 கோடி மனித நாட்களை எட்டியுள்ளதாகவும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2023-2024 நிதியாண்டில், 19.7.2023 வரை, தொழிலாளர்களுக்கு திறன்சாரா ஊதியத்திற்காக ரூ.4,903.25 கோடியை ஒன்றிய அரசு விடுவித்துள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து 25.9.2023 அன்று 1,755.43 கோடி ரூபாய், திறன்சாரா ஊதியம் வழங்குவதற்காக ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், எனினும் அனுமதிக்கப்பட்ட தொகையில் ரூ.418.23 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள ரூ.1,337.20 கோடி, தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்று தெரிய வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதோடு, அதற்குப்பிறகான வாரங்களுக்கான ஊதியத்திற்கான ரூ.1,359.57 கோடி நிலுவைத் தொகையும் இன்னும் வழங்கப்படவில்லை என்றும், 20.10.2023 நிலவரப்படி, தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் ஊதிய நிலுவை ரூ.2,696.77 கோடி என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் ஒரு பகுதியாக, கடந்த 17 .10.2023 அன்று, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தான் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, வரவிருக்கும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தம்மிடம் கோரிக்கை விடுத்ததாகவும், இதேபோன்ற கோரிக்கை திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுப் பயணத்தின் போதும் தமக்கு வந்ததாகவும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,696.77 கோடி மொத்த ஊதிய நிலுவைக்கான தொகையினை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதோடு, திறன்சாரா தொழிலாளர் களுக்குத் தொடர்ந்து கூடுதல் நிதி விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான 3 நாள் கருத்தியல் கருத்தரங்கில் கழகபொதுச் செயலாளரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பேசினார். உடன் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், இரா.ராஜீவ்காந்தி, சி.ஜெரால்டு, எஸ்.மோகன், சோழராஜன் ரா.தமிழரசன் பி.செந்தில்குமார்,கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த்க.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ணசங்கீதா, ஜெ.வீரமணி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் திருப்பத்தூர் க.தேவராஜி எம்.எல்.ஏ,, வேலூர் ஏ.பி.நந்குமார் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்ட

## ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் கையெழுத்து இயக்கம்!

### மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை!

*கோவை, அக். 28-*

*கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளர் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி அனுமதியுடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி ஆகியோரின் ஆலோசனைப்படி கோவை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழுவின் சார்பில் இன்று (28.10.2023 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் பேரூராட்சியில் 'நீட் விலக்கு நமது இலக்கு' என்ற தலைப்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற உள்ளது.*

*இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மற்றும் ஒன்றிய கழக செயலாளர் கே.கே.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகரன் மற்றும் துணை அமைப்பாளர்கள் வரவேற்க மாபெரும் கையெழுத்து இயக்க நிகழ்வை மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி துவக்கி வைக்க உள்ளார்.*

*அது சமயம் இந்நிகழ்வில் மாவட்டச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக செயலாளர், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் நல குழு கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*



ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நேற்று முன்தினம் (26.10.2023) நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கிய செயற்குழுவின் விருதினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெற்றுக் கொண்டார்.

# அரசு பொதுத் துறை நிறுவனப் பணியாளர்களுக்கு 20 சதவிகிதம் வரை போனஸ்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக். 28-

**அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமிக்க மாநிலமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துவதில் தொழிலாளர்களின் உழைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இவர்களின் உழைப்பால்தான் நாடே வியக்கும் வண்ணம் பொருளாதார வளர்ச்சியை அடைந்தது மட்டுமின்றி குறிப்பிடத்தக்க அந்நிய முதலீடுகளையும் தமிழ்நாடு ஈர்த்து வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசின் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில், 2022-23 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

**மிகை ஊதியம் கருணைத் தொகை!**

திருத்தப்பட்ட மிகை ஊதியச் சட்டம் 2015இன் படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21000 என உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி மிகை ஊதியம் கணக்கிட இருந்த மாதாந்திர உச்சவரம்பும் ரூ.7000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி 2022-23 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையினை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

இலாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.

**வீட்டு வசதி வாரியம் குடிநீர் வழங்கல் வாரியம்!**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

இது தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 3,000/ ரூபாயும் கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இதனால் மிகை ஊதியம் பெற தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8400ம் அதிகபட்சம் ரூ.16800ம் பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2 லட்சத்து 83 ஆயிரத்து 787 தொழிலாளர்களுக்கு 402 கோடியே 97 லட்சம் ரூபாய் மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும். இது தவிர பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் எதிர் வரும் விழாக் காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

---

# ஆளுநர் இங்கே தொடர்வது கழக ஆட்சிக்கு நல்லது!

## மணவிழாவில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

பேசும்போது இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். புருஷோத்தம் அவர்கள் தன்னை இந்த இயக்கத்தோடு இணைத்துக் கொண்டு இயக்கப்பணிகளை எப்படியெல்லாம் ஆற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை அவரை அறிந்தவர்கள், அவரைப் புரிந்தவர்கள் குறிப்பாக இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மிகத் தெளிவாக உணர்வார்கள், அறிவார்கள்.

1981–ஆம் ஆண்டு மாணவர் அமைப்பை ஏற்படுத்தி, அந்த மாணவர்களை எல்லாம் வைத்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, அப்படி நடத்திய நிகழ்ச்சிக்குத் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து வந்து, அதைத் தலைவர் கலைஞர் பார்த்து மகிழ்ச்சி அடையக்கூடிய அளவுக்கு நடத்திக் காட்டியவர் நம்முடைய அருமைச் சகோதரர் புருஷோத்தம் அவர்கள்.

1991–இல் இருந்து உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்கறிஞராகப் பொறுப்பேற்றார். அப்படி பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் வரலாற்றில் யாரும் மறந்திடாத ஒரு கொடுமையான செய்தி. என்ன செய்தி என்று கேட்டால், அப்போது தமிழ்நாட்டில் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் நீங்கள் பார்க்கிறீர்கள். நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது, 10 மேம்பாலங்கள் கட்டினோம். இதுவரைக்கும் சென்னையைப் பொறுத்தவரைக்கும் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக் கூடிய எந்த மாநகரமாக இருந்தாலும், மேம்பாலங்கள் கட்டுவது என்பது மாநகராட்சியின் வேலையல்ல. அது பொதுப்பணித் துறைதான் கட்டவேண்டும். ஒன்றிய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் தான் கட்டவேண்டும். நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கட்டுவார்கள். மாநகராட்சி கட்டிய வரலாறே கிடையாது.

ஆனால் 1996–லிருந்து 2001 வரைக்கும், அதற்குப் பிறகு 2006–இல் இருந்து தொடர்ந்து நான் இந்த மாநகரத்தின் மேயராக இருந்தபோது 10 மேம்பாலங்களைப் போக்குவரத்தின் நெரிசலின் அடிப்படையில் கட்டவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான பணிகளில் ஈடுபட்டோம். வேகப்படுத்தினோம், விரைவுபடுத்தினோம். அந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயிக்கப்பட்டு, அந்தக் காலத்திற்குள் 10 பாலங்களையும் கட்டி முடிக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். ஆனால் 10 பாலங்களில் ஒரு பாலம் பெரம்பூரில் இருக்கக்கூடிய மேம்பாலம். அதில் சிறிது டெக்னிக்கல் பிரச்சினை இருந்தது. அதனால், விரைவாக குறித்த நேரத்தில் கட்டுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் சிறிது தடைபட்டது. ஆனால் மீதம் இருக்கக்கூடிய 9 மேம்பாலங்களைக் குறித்த காலத்தில் மட்டுமல்ல, குறித்த காலத்திற்கு முன்பே கட்டிமுடித்த பெருமை நமக்குண்டு.

**பெரம்பூர் பாலம்!**

அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றம் வந்தது. ஆட்சி மாற்றம் வந்த காரணத்தினால், அந்தப் பெரம்பூர் பாலம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. அதை ஏன் கிடப்பில் போட்டார்கள் என்ற விஷயத்தை நான் சொல்கிறேன். அது ஒரு பெரிய விஷயம். ஆனால் அதற்குப் பிறகு நாம் மீண்டும் ஆட்சிக்கு வருகிறோம். மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நாம் ஆட்சியிலிருந்தபோது அடிக்கல் நாட்டிப் பாதி பணியை முடித்து டெக்னிக்கல் பிரச்சனையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பாலம் அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு நம்முடைய தலைவர்தான், எந்தத் தலைவர் அடிக்கல் நாட்டினாரோ அதே தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார். இதுதான் ரெக்கார்டு. அதோடு இன்னொரு அதிசயம் என்ன என்று கேட்டால், அரசு சார்பிலோ அல்லது மாநகராட்சி சார்பிலோ ஏதாவது கட்டிடம் கட்டுகிறோம், பாலங்கள் கட்டுகிறோம், ரோடு போடுகிறோம், தெருவிளக்கு போடுகிறோம், கால்வாய் கட்டுகிறோம் இதுபோன்ற பணிகளைச் செய்கின்றபோது ஒரு காலத்தை நிர்ணயிப்போம். காலத்தை நிர்ணயிப்பது மட்டுமல்ல, ஒரு மதிப்பீடு போடுவோம், இந்த மதிப்பீட்டுக்குள் கட்டப் போகிறோம் என்று முடிவெடுப்போம். கடைசியில் கணக்கெடுத்துப் பார்த்தால், அந்த மதிப்பீடு போட்டதைவிடத் தாண்டிப் போயிருக்கும். ஏனென்றால் சில டெக்னிக்கல் பிரச்சினை வந்துவிடும், அதனால் காலதாமதமாகும். அப்போது விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையில், நாம் அதிகமாகச் செலவு செய்யக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். இது எதார்த்தமான நிலை.

ஆனால் சென்னை மாநகரத்தில் கட்டியபோது எவ்வளவு காலத்திற்குள் கட்டிவிடுவோம் என்று சொன்னோமோ, அந்த காலத்திற்குள் கட்டிமுடித்தோம் என்பது மட்டுமல்ல, எந்த மதிப்பீட்டில் கட்டிமுடிக்கவேண்டும் என்று சொன்னோமோ அதைவிடக் குறைவாக அந்தப் பாலத்தைக் கட்டிமுடித்தோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இடையில் அதிமுக ஆட்சிக்கு வந்தது. அந்தப் பாலத்தில் ஊழல் நடந்திருக்கிறது என்று ஒரு வழக்கு போட்டார்கள். ஜெயலலிதா அவர்கள் ஆட்சில் அந்த வழக்கு போட்டார்கள்.

இரவோடு இரவாக, தலைவர் கலைஞரைக் கைது செய்த கொடுமையை எல்லாம் பார்த்திருப்பீர்கள்.

> **இன்றைக்கு பெரிய பெரிய பதவியில் உட்கார்ந்து கொண்டு, யார் யாரோ கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அந்த பதவி என்பதே வேஸ்ட். அதுவும் பெரிய பெரிய மாளிகையில் உட்கார்ந்து கொண்டு, ‘திராவிடம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன?’ இப்போது நடந்து கொண்டிருக்கிற கல்யாணம் இதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன என்று கேட்க வைத்திருக்கிறதே, அதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன? என்று கேட்கிறாரே அவரே தொடர்ந்து இருக்க வேண்டும். அது இன்னும் நம்முடைய பிரச்சாரத்திற்கு வலு சேர்த்துக்கொண்டே இருக்கிறது.**

அதையெல்லாம் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஒரு நல்ல நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த சோகமான நிகழ்ச்சியை எல்லாம் இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை.

**புருசோத்தம் தொடுத்த பொதுநல வழக்கு!**

**கலைஞரைக் கைது செய்தபோது, அன்றைக்கு ஒரு பொதுநல வழக்காக நம்முடைய புருஷோத்தம் அவர்கள் தொடுத்தார். அந்த பொதுநல வழக்கை தொடுத்த காரணத்தினால்தான் அன்றைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி என்.கே. ஜெயின் அவர்கள் அதை விசாரித்து ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் கண்டனத்தைத் தெரிவித்து உடனடியாக விடுதலை செய்தார். இதுதான் புருசோத்தமனுக் கும், நம்முடைய இயக்கத்திற்கும், இயக்கத்தில் இருக்கக்கூடிய தலைவருக்கும் உள்ள வரலாறு என்பதை நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.**

**அவருடைய திறமை, அதற்குப் பிறகு படிப்படியாக மாநில அரசு வழக்கறிஞராக நியமனம் பெற்றார். ஒன்றிய அரசின் மூத்த குழு வழக்கறிஞராவும் இரண்டு முறை பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்.**

**கழகத்தின் சார்பில் நடத்தக்கூடிய எந்தப் போராட்டமாக இருந்தாலும், அதில் வழக்கறிஞர்கள் பங்கேற்கிறார்கள் என்று சொன்னால், அதில் அவரும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.**

இன்றைக்கு, அவருடைய மகள், அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான் என்று சொல்வார்கள், அப்பாவுக்குப் பொண்ணு தப்பாமல் பிறந்திருக்கிறார். மணமகளாக வீற்றிருக்கக்கூடிய பூர்ணிமா அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், மாநகராட்சி மன்ற உறுப்பினராக மட்டுமல்ல, சுகாதார நிலைக்குழு உறுப்பினராக பொறுப்பேற்று அந்த கடமையும் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கின்றபோது, இங்கே கூட சொன்னார்கள். நம்முடைய டி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் பேசுகிறபோது, பெண்களுக்கு எந்தளவுக்கு உரிமை தருகிறோம், முதன்முதலாக ராஜீவ்காந்தி அவர்கள் 33 விழுக்காடு ஒதுக்கீட்டை பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில் வழங்கவேண்டும் என்று சொன்னபோது எந்த மாநிலமும் நிறைவேற்றுவதற்கு முன்வர வில்லை, முதல் மாநிலம் தமிழ்நாடுதான் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் சென்னையின் மேயராக இருந்தபோது. இதுதான் திராவிட மாடல்.

இன்றைக்கு பெரிய பெரிய பதவியில் உட்கார்ந்து கொண்டு, யார் யாரோ கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அந்த பதவி என்பதே வேஸ்ட். அதுவும் பெரிய பெரிய மாளிகையில் உட்கார்ந்து கொண்டு, திராவிடம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன? இப்போது நடந்து கொண்டிருக்கிற கல்யாணம் இதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன என்று கேட்க வைத்திருக்கிறதே, அதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன? என்று கேட்கிறாரே அவரே தொடர்ந்து இருக்க வேண்டும். அது இன்னும் நம்முடைய பிரச்சாரத்திற்கு வலு சேர்த்துக் கொண்டே இருக்கிறது.

நான் இங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அரசில் இருக்கக்கூடிய பிரதமரை, உள்துறை அமைச்சராக இருக்கின்ற அமித் ஷா அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து இங்கே இருக்கக் கூடிய ஆளுநரை மட்டும் என்றைக்கும் மாற்றவேண்டாம். இந்த நாடாளுமன்றத் தேர்தல் வரைக்குமாவது இருக்கவேண்டும். அதில் எங்களுக்கு பல சௌகரியங்கள். எது வேண்டுமென்றாலும் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் இன்றைக்குப் பொதுமக்கள் யாரும் இதை பொருட்படுத்தவில்லை. இன்றைக்கு சமூக ஊடகங்களில் வந்து கொண்டிருக்கக்கூடிய செய்திகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்தச் சூழ்நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி பொறுப்பேற்று தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறதோ, அந்த உறுதிமொழிகளை எல்லாம் சிறப்பாகத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்த காட்சிகளை எல்லாம் பார்க்கிறீர்கள்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி!**

இன்றைக்குக் கருத்துக்கணிப்பு வரக்கூடிய சூழ்நிலை எல்லாம் பார்க்கிறபோது, எப்படி தமிழ்நாட்டில் ஒரு மிகப்பெரிய வெற்றியைக் கடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றோமோ, அதே போல் வட மாநிலத்தில் நடைபெற இருக்கக்கூடிய 5 மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக, உறுதியாக இந்தியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மோடி அவர்கள் தலைமையில் ஆண்டு கொண்டிருக்கக் கூடிய ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 2024ல் நடைபெறவிருக்கக்கூடிய நாடாளுமன்ற தேர்தலுக்கு நீங்கள் எல்லாம் தயாராக இருக்க வேண்டும், தயாராக இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, மணமக்களை பொறுத்தவரைக்கும் எப்போதும் கோரிக்கைகள் வைக்கமாட்டேன். அதிலும் நம்முடைய மணமகள் டாக்டர், மணமகன் ராதாகிருஷ்ணன், இன்ஜினியர், பி.இ. படித்திருக்கிறார். நாட்டில் இருக்கக்கூடிய நிலவரங்கள் அத்தனையும் அவர்களுக்கு நன்றாக புரியும்.

அதனால் அவர்களுக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இருந்தாலும், ஒரே ஒரு வேண்டுகோள், தமிழ்நாட்டில் இருக்கிறோம், தமிழர்களாக வாழ்கிறோம், தமிழுக்காகவே போராடுகிறோம், தமிழுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள், சூட்டுங்கள் என்று அன்போடு கேட்டு, அன்போடு மட்டுமல்ல, உரிமையோடு கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

முதல் பக்கத் தொடர்ச்சி

அதில், நீட் தேர்வினால் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மாணவர்கள் தற்கொலைகள் குறித்தெல்லாம் குறிப்பிட்டு, இனியும் தாமதிக்காமல் மேற்படி சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென தான் கோரியிருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதோடு, ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய கேள்விகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இதுவரை இந்தச் சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலை உள்ளது என்றும் முதலமைச்சர் அவர்கள் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

**தகுதி வாய்ந்தவர்களின் சேர்க்கை பறிப்பு!**

இந்தச் சூழ்நிலையில், நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிப்பதில் ஏற்பட்டுள்ள அதீத காலதாமதம், அதிக கட்டணங்களைச் செலுத்தி பயிற்சி பெற முடியாத, பல தகுதிவாய்ந்த மாணவர்களின் மருத்துவ சேர்க்கையைப் பறித்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் பரந்த சட்டமன்ற, அரசியல் மற்றும் சமூக ஒருமித்த கருத்தின் நோக்கத்தைச் செயல்படுத்திட இயலாமல் முடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த உணர்வுப்பூர்வமான பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, நீட் விலக்கு தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# முத்தமிழறிஞர் கலைஞரும், முதல்வர் தளபதியாரும்தான் வரலாற்றில் மருதுபாண்டியர்களுக்கு அழியாப் புகழ் சேர்த்தவர்கள்!

வரலாற்றுப் பேராசிரியர் கே.ராசய்யன் அவர்கள் '1800-1801 ஆண்டில் தமிழ்நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்கள்தான், இந்த மண்ணில் ஆங்கிலேயருக்கு எதிரான முதல் சுதந்திரப் போராட்டம்' என சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ள தொடர்புடைய ஆவணங்கள், அறிக்கைகள், கடிதங்களின் பதிவுகள், ராணுவக் குறிப்புகள் ஆகிய தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்து ஆங்கிலத்தில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார் (South Indian Rebellion (1800-1801) - The First War of Independence).

ஆங்கிலேயர்களை அந்தக் காலக்கட்டத்தில் எதிர்த்து இந்த மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஆயுதமேந்திய மக்கள் புரட்சிதான் சரியான வழிமுறையாக இருக்க முடியுமெனக் கருதிய மருது பாண்டியர்கள் அதற்கான திட்டங்களையும், வழிமுறைகளையும், பிரஞ்சுப் புரட்சியின் அடிப்படையில் உருவாக்கினார்கள்.

தென்நாட்டின் பகுதிகளான ஆந்திரா, கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த சிற்றரசர்களும், தமிழ்நாட்டு பாளையக்காரர்களும், காளையார்கோவில் காடுகளில் ஒன்றுகூடி ஆங்கிலேயருக்கு எதிரான போர்க்கூட்டணி ஒன்றை உருவாக்கினார்கள். அந்தக் கூட்டணிக்கு மருதுபாண்டிய சகோதரர்கள் தலைமையேற்று ஆயுதமேந்திய மக்கள் புரட்சிக்கான திட்டங்களை உருவாக்குகிறார்கள். இந்தப் போர்க் கூட்டணியின் தலைவர்கள் என்ற முறையில் மருது பாண்டியர்கள் வடக்கே குவாலியர் வரையிலும், ஆங்கிலேயருக்கு எதிரான மக்கள் புரட்சியின் திட்டங்கள் தும்பிச்சி முதலியார் என்ற தூதுவர் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மருதுபாண்டியர்களுக்கு பிரான்சு நாட்டின் மக்கள் புரட்சி பற்றியும், அமெரிக்க சுதந்திரப்போர் பற்றிய விபரங்களையும் அறிந்திருக்கிறார்கள் என ஆங்கிலேயர்கள் தங்களது ஆவணங்களில் பதிவு செய்துள்ளார்கள்.

**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



அன்றைய தினம் மைசூர் புலியெனப் பாராட்டப்பட்ட திப்புசுல்தான் மூலமாக பிரான்சு நாட்டின் மாவீரன் நெப்போலியனோடு தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதும் ஆங்கிலேயரின் ஆவணகளில் பதிவாகியிருக்கிறது. மாமன்னர் மருதுபாண்டியர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த மக்கள் புரட்சி ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்களாலும், முறையாக பயிற்சிபெற்ற ராணுவத்தாலும் அன்றைய காலக்கட்டத்தில் சுதேசிப் புரட்சியாளர்களால் உடனடியாக தொடர்புகொள்ள முடியாத சூழ்நிலைகளாலும், இங்குள்ள துரோகிகள் ஆங்கிலேயருக்கு அவ்வப்பொழுது மக்கள் புரட்சியாளர்களின் நடமாட்டத்தையும், ஆயுத சேமிப்புக் கூடங்குகளையும், காட்டிக்கொடுத்தமையாலும் மக்கள் புரட்சி தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. வஞ்சம் தீர்க்க எண்ணிய ஆங்கிலேயர்கள் மருது சகோதர்களையும், அவர்களது ஆண் வாரிசுகளையும் உள்ளடக்கி 500-க்கும் மேற்பட்டவர்கள் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். அதுமட்டுமல்ல, மருதுபாண்டியர்களின் புரட்சிப்படையில் பணியாற்றியவர்களை நூற்றுக்கணக்கில் ஆங்காங்கு புளியமரங்களில் தூக்கிலிட்ட பின்னரும், அவர்களது பழிவாங்கும் போக்கு முடிவிற்கு வரவில்லை.

இந்தக் கோர நிகழ்ச்சிகள் முடிவிற்கு வந்தபின்னர் எஞ்சிய 73 மக்கள் புரட்சியாளர்களை நிரந்தரமாக நாடுகடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளை ஆங்கிலேயர்கள் தீவிரமாகவும், விரைவாகவும் செய்துமுடித்தனர். அந்த 73 பேர்களும், தென் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அனைத்து சாதிப்பிரிவுகளையும் சார்ந்தவர்கள்தான் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்கள். மக்கள் ஒவ்வொரு ஆண்டு தோறும் அனுசரிக்கும் மருதுபாண்டியர்களின் நினைவுநாளான 27.10.2023 (222-வது நினைவுநாள்) தேதியில் அந்த துயர நிகழ்ச்சியினை சில நிமிடங்களாவது எண்ணிப்பார்ப்பதென்பது, அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் செய்திடும் உயர்ந்த மரியாதையாகவே கருதப்படும்.

நிரந்தரமாக சுதந்திரப் போராட்டக்களத் தியாகிகள் நாடுகடத்தப்பட்ட 11.02.1802-ஆம் நாள் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ஜேம்ஸ் வெல்ஸ் எனும் ஆங்கிலேயர் தலைமையிலான ராணுவப் பாதுகாப்புடன், பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்ற பினாங்க் தீவிற்கு அட்மிரல் நெல்சன் (Admiral Nelson) என்ற கப்பல் மூலம் லெப்டினென்ட் ராக்ஹெட் (Liewtenant Rockhead) தலைமையில் அனுப்பி வைக்கப்பட்டார்கள். பினாங்க் தீவிற்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களில் மருதுபாண்டியர்களின் மகன் துரைச்சாமிக்கு வயது 15. அதுமட்டுமல்ல, நாடுகடத்தப்பட்டவர்களுக்கு கைகளிலும், கால்களிலும் விலங்கு மாட்டப்பட்டிருந்தன.

நாடுகடத்தப்பட்ட இந்த சுதந்திர வேட்கை கொண்ட தியாகிகள், 76 நாட்கள் கடல் பயணத்திற்குப் பின்னர் பினாங்க் தீவில் உள்ள கார்ன்வாலீஸ் கோட்டையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் மூலம் அங்கு கட்டப்பட்ட கிறித்துவ தேவாலயமும் அந்த கார்ன்வாலீஸ் கோட்டைக்கு அருகிலேயே உள்ளது. ஆம்! அவர்கள் தியாகத்தின் நிரந்தர நினைவுச்சின்னமாக காலம் பல கடந்தும் காட்சி தந்து கொண்டிருக்கிறது. நாடுகடத்தப்பட்ட 73 தியாகிகளும், பல்வேறு பிரிவுகளையும், பகுதிகளையும் சேர்ந்தவர்கள் என்பதுமட்டுமல்ல, மருதுபாண்டியர்கள் தலைமையில் சிவகங்கைச் சீமையில் திட்டமிட்டு நடைபெற்ற ஆங்கிலேயருக்கு எதிரான ஆயுதப்புரட்சி "மக்கள் புரட்சி தான்" என்பதற்கு, என்றும் நிலைத்திருக்கும் அழிக்கமுடியாத சாட்சியங்களாகும். அந்த 73 தியாகிகளின் பட்டியல் ஆவணக்காப்பகத்தில் பதிவு செய்யப்பட்டதை இங்கு தருவதன் மூலம் அவர்களுக்கு நம் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்!!

பினாங்க் தீவிற்கு நாடுகடத்தப்பட்டோர் பட்டியல், ஆவணக்காப்பகத்தில் உள்ளபடி, இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

வேங்கம் பெரிய உடையா தேவர் - சிவகங்கை
துரைசாமி, த/பெ.மருதுபாண்டியன்
பொம்மநாயக்கர் - வீராப்பூர்
ஜெகனாத அய்யர் - ராமநாதபுரம்
ஆண்டியப்ப தேவன் - ஆணியூர் நாடு
சடமாயன் - கருமாத்தூர் நாடு
கோனிமாயத்தேவன் - உசிலம்பட்டி
தளவாய் குமாரசாமி நாயக்கர் - பாஞ்சாலங்குறிச்சி
குமாரதேவர் - மேலூர்
பாண்டியன் - பாண்டியம்புத்தூர்
முத்துவீரன் - அருங்குளம்
சாமி - மணக்காடு
ராமசாமி

**கள்ளக்காடுப்பகுதி தியாகிகள்**

இருளப்பதேவர் - நாங்குநேரி
பாண்டியன் நாயக்கர் - கொம்பாடி
மாடத்தேவன்
மலையில்மாடன்
சின்னபிச்சா தேவன்
வீரபாண்டித் தேவன்
வீரபெருமாள் தேவன்
கருப்ப தேவன்
சுளுவமணியன்
நந்தசாமி
பெருமாள்
உடையாத்தேவன்
தேவி நாயக்கர்
முத்துராமத்தேவன்
மான்டா தேவன்

**நாங்குநேரி தியாகிகள்**

பேயன்
அழகநம்பி
வைகுண்டதேவன்
சிரீயன்னதேவன்
கோனியாமும்
முல்லைவடிவு
சந்தானம்
வீரபத்திரன்
சலம்பன்
பேயன்
ராமசாமி
இருளப்பன்
குமாரசாமி
வீரபாண்டியன்
வெங்கட்டராயன்
உடையார்
முத்துராக்கு
முத்துராக்கு - ஆணைக்குளம்
சொக்குதளவாய் - தெற்கு மாங்குடி
இருளப்பதேவன்
மல்லையநாயக்கர் - எல்லம்பட்டி
சுளுவமனிய நாயக்கர் - நாயக்கன்பட்டி
தொம்பச்சி நாயக்கர்
சுளுவமனிய நாயக்கர்
ராமசாமி - குளத்தூர்
பிச்சாண்டி நாயக்கன்
தளவாய் - கல்லுமடம்
சின்னமாடன் - பசுவந்தனை
வைத்தியமூர்த்தி - கண்டீஸ்வரம்
தளவாய்ப்பிள்ளை
சுளுவமணியன்
பெத்தன்ன நாயக்கர்
கிருஷ்ணம நாயக்கர்
வலுவன் - குளத்தூர்
மயிலனன் - அரச்சேரி
வயலமுத்து - கனகராயக்குறிச்சி
ராமன் - சூளை
பாளைய நாயக்கர் - சூரன்குடி - நாஞ்சில் நாடு
குமரன்
வெள்ளகொண்டான்

**திண்டுக்கல்**

ராமன்
அழகுசொக்கு
சேக்உசேன்
அப்பாநாயக்கர்
குப்பனபிள்ளை

[South Indian Rebellion 1800-1801, The First War of Independence, Page No.322 to 324]

இவர்கள் 73 பேரில், மருதுபாண்டியர் மகன் துரைச்சாமி மட்டும் சொந்த ஊர் திரும்பி, இறந்துவிட்டதாக ஆவணக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. தீர்க்கமாக உறுதிசெய்ய இயலவில்லை. மற்ற அனைவரும் தாய்மண்ணை மிதிக்காமலே அந்தத் தீவிலேயே மாண்டுபோனார்கள். ஒருமுறை முத்தமிழறிஞர் தூத்துக்குடியில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பொழுது, கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த திரு.சிவசாமி அவர்கள், பொதுக்கூட்டத்திலேயே ஒரு கோரிக்கை வைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் மாமதுரையில் மாமன்னர் அவர்கள் மருதுபாண்டியர்களுக்கு திருவுருவச்சிலைகளைத் திறந்தார், "திராவிடமாடல்" ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை காந்தி மைதானத்தில் மருதுபாண்டியர்களுக்கு சிலைகளைத் திறந்தார். இத்துடன் தூத்துக்குடியில் நாடுகடத்தப்பட்ட 73 தியாகிகளுக்கும் நினைவுச்சின்னத்தையும் எழுப்பிவிட்டால் அந்த முதல் சுதந்திரப் போராட்ட வீர வரலாற்றை என்றும் எதிர்காலத்தில் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும். ஆம்! அந்த அழியாத புகழுக்கும், பெருமைக்கும் முத்தமிழறிஞர் கலைஞரும், தமிழ்நாடு முதல்வர் தளபதியாரும் என்றும் கலங்கரை விளக்கங்களாக காலம்கடந்தும் அந்த தியாக வரலாற்றுக்குத் திசை வழிகாட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை!!

# திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் - தலையாமங்கலம்.ஜி.பாலு பங்கேற்பு!

திருவாரூர்,அக்28-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு , நகர செயலாளர் வரை.எஸ்.பிரகாஷ் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் பங்கேற்க நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில்களும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டு உடனடி தீர்வுக்கு வழிவகைகள் செய்யப்பட்டது

மேலும் திருவாரூர் மாவட்டத்தில், அக்டோபர்2023 மாத இயல்பான மழையளவு 205.65 மி.மீ. ஆகும். நடப்பாண்டில் அக்டோபர் மாதத்தில் 39.11 மி.மீ மழை பெறப்பட்டது. 25.10.2023 அன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 49.38 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4334 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 503 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. 2023-24ஆம் ஆண்டில் குறுவை பருவத்தில் 36,914 ஹெக்டேரிலும், சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 1,53,808 ஹெக்டேரிலும், கோடை சாகுபடி 9,742 ஹெக்டேரிலும் ஆக மொத்தம் 2,00,464 ஹெக்டேரில் சாகுபடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, அதில் குறுவை பருவத்தில் 19,681 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு முறையிலும், 41,101 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 9,311 ஹெக்டேரில் சாதாரண நெல் நடவு முறையிலும் ஆக மொத்தம் 70,093 ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் 21,645.2 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு முறையிலும், 17,454 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 10,194.5 ஹெக்டேரில் சாதாரண நெல் நடவு முறையிலும் ஆக மொத்தம் 49,293.65 ஹெக்டேரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தாளடி பருவத்தில் 4955 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு முறையிலும், 3,493 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 808 ஹெக்டேரில் சாதாரண நெல் நடவு முறையிலும் ஆக மொத்தம் 9256 ஹெக்டேரில் தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 253 ஹெக்டேரில் சம்பா,தாளடி சாகுபடிக்கு தேவையான நாற்றாங்கால் இருப்பில் உள்ளது.

2023-2024ஆம் ஆண்டில் உளுந்து 36,700 ஹெக்டேரிலும், பச்சைப்பயறு 50,000 ஹெக்டேரிலும்; ஆக மொத்தம் 86,700 ஹெக்டேரில் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், காரீப் பருவத்தில் 762 ஹெக்டேரில் உளுந்து சாகுபடியும், ராபி பருவத்தில் 29 ஹெக்டேரில் உளுந்து சாகுபடியும் செய்யப்பட்டுள்ளது. 2023 2024ஆம் ஆண்டில் நிலக்கடலை 4,480 ஹெக்டேரிலும், எள் 2,530 ஹெக்டேரிலும் சாகுபடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் 84 ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடியும், 88ஹெக்டேரில் எள் சாகுபடியும் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2023-2024ஆம் ஆண்டில் பருத்தி 14,000 ஹெக்டேரிலும், கரும்பு 120 ஹெக்டேரிலும் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், 85 ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிஷான் சம்மான் நிதித் திட்டமானது 2018ம் ஆண்டு டிசம்பர் 1ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் முதலில் சிறு, குறு விவசாயி களுக்கு மட்டும் என்று துவங்கி தற்போது அனைத்து விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிர் சாகுபடிக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களை கொள்முதல் செய்வதற்கான உதவித் தொகையாக விவசாய குடும்பங்களுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2000ம் வீதம் ஆண்டுக்கு ரூ.ஆறாயிரம் என மூன்று தவணைகளில் விவசாயி களின் வங்கி கணக்கில் நேரடி மாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 14 தவணைகள் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. அடுத்த 15வது தவணைத் தொகை வரும் மாதத்தில் விடுவிக்கப்படவுள்ளது. எனவே, அடுத்த தவணை பி.எம் கிஷான் உதவித் தொகை பெற நமுலுஊயை பதிவேற்றம் செய்ய வேண்டும் என மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்ய தவறிய விவசாயிகளுக்கு 15வது தவணை மற்றும் அதனை தொடர்ந்து வரும் தவணை வழங்கப்படமாட்டாது.

எனவே, இந்த திட்டத்தின்படி, பதிவு செய்து பயன்பெற தகுதியான பயனாளிகள் அனைவரும் பெயர் மற்றும் ஆதார் விபரங்களை மத்திய அரசின் பி.எம் கிஷான் இணைய வாயிலாக விவசாயிகள் நேரடியாக ஆதார் விபரங்களை பதிவு செய்ய வேண்டும் அல்லது பி.எம் கிஷான் திட்ட பயனாளிகள் அருகில் உள்ள பொது சேவை மையங்களுக்கு நேரிடையாக ஆதார் விபரங்களை எடுத்துச் சென்று கைரேகை வைத்து பெயர் உள்ளிட்ட விபரங்களை பதிவேற்றம் செய்து கொண்டு பயன்பெறவேண்டும். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலமாக பி.எம்.கிஷான் செயலி மூலம் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

திருவாரூர் மாவட்டத்தில் 1956 பயனாளிகள் தங்களது பயனாளிகள் ஆதார் விபரங்களை பதிவேற்றம் செய்யாமல் உள்ளனர். எனவே, அனைத்து பி.எம் கிஷான் திட்ட பயனாளிகள் தங்களது ஆதார் விபரங்களை மேற்கண்ட வழிமுறையில் பதிவேற்றம் செய்தால் மட்டுமே அடுத்த தவணை பி.எம் கிஷான் உதவித்தொகை கிடைக்கும். மேலும், விபரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். விவசாயிகள் அனைவரும் ஆதார் எண்ணை பதிவேற்றம் செய்து பயன்பெறுமாறு இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

# திருப்பூர் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள்!

## க.செல்வராஜ் எம்.எல்.ஏ. - இல.பத்மநாபன் முன்னிலை!

திருப்பூர், அக். 28-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான மு.பெ.சாமிநாதன் 26.10.2023 வியாழக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில், திருப்பூர் மாநகராட்சி ஜெய்வாபாய் மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் 2023-2024 ஆண்டுக்கான மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பின்படி 2022-2023 ஆம் ஆண்டு முதல் கலைத் திருவிழா போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக 2023 2024 ஆம் கல்வி ஆண்டிலும் கலைத் திருவிழா போட்டிகள் மாவட்ட அளவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித் துறையின் முன்னெடுப்பின்படி மாநிலம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் கலைத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடனம், இசை, ஓவியம், நாட்டுப்புறக் கலைகள், நவீன கலை வடிவங்கள் எனப் பலவற்றிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தி வருகிறார்கள்.பள்ளி மாணவர்களின் கலைத்திறனை ஊக்கப்படுத்துவதன் வழியாக அவர்களுக்கு கல்வியின் மீதான ஈடுபாட்டையும் வளர்த்தெடுக்க முடியும்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் கலைத் திருவிழாப் போட்டிகள் 10.10.2023 முதல் 14.10.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் 1,25,613 மாணாக்கர்கள் பங்கேற்று 32,860 மாணாக்கர்கள் வெற்றி பெற்றனர். தொடர்ந்து, வட்டார அளவிலான போட்டிகள் 18.10.2023 முதல் 21.10.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் 22,994 மாணாக்கர்கள் பங்கேற்று 8,877 மாணாக்கர்கள் வெற்றி பெற்றனர். கலைத் திருவிழாப் போட்டிகள் மாவட்ட அளவில் ஜெய்வாபாய் மாதிரி நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 25.10.2023 தொடங்கி 28.10.2023 வரை நடைபெறவுள்ளது. இக்கலைத் திருவிழாவில் பல்வேறு போட்டிகளில் 6,801 மாணக்கர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, மாநில அளவிலான போட்டிகள் 21.11.2023 முதல் 24.11.2023 வரை நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் கட்டுரை, பேச்சு, ஓவியம், நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் முதலிய வகைகளில் கீழ்க்கண்ட 3 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகிறது. 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு 33 வகையான போட்டிகள், 9 முதல் 10 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு 75 வகையான போட்டிகள் மற்றும் 11 முதல் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு 82 வகையான போட்டிகள் நடைபெறுகிறது. கலைத் திருவிழாப் போட்டிகளில் மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மாணாக்கர்களுக்கு "கலையரசன்", "கலையரசி" விருதுகள் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படவுள்ளது. மேலும், கலைத் திருவிழாப் போட்டிகளில் சிறப்பாக செயல்படக்கூடிய 20 மாணாக்கர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பர மணியன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ந.கீதா, கல்விக் குழுத் தலைவர், 36ம் வார்டு மாமன்ற உறுப்பினர் பெ. திவாகரன், மாவட்ட கல்வி அலுவலர் மு.பக்தவச்சலம், திருப்பூர் வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பொங்கலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.பாலுசாமி, பகுதி கழக செயலாளர்கள் கொ.ராமதாஸ் 15 வேலம்பாளையம், மியாமி ஆ.அய்யப்பன் கருவம்பாளையம், வட்டக் கழக செயலாளர் பொ.ஆனந்த், கட்டுமான தொ.மு.ச. பி.எஸ். பாண்டியன், மீனவரணி கருணாகரன், ஆசிரியர்கள், பள்ளி மாணாக்கர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி.டி. தண்டபாணி**
**அக்டோபர் 28 (2001)**



**கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இந்திய கடல்சார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை நேற்று முன்தினம் (26.10.2023) சென்னை விமான நிலையத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை மற்றும் “மணிமேகலை காப்பியத்தின்” ஆங்கில பதிப்பு புத்தகம் வழங்கி வரவேற்றார். ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இட்டுக்கட்டி புகார் கொடுக்கப்பட்டுள்ளது!

# ஆளுநர் மாளிகையால் மிகைப்படுத்தப்பட்ட செயல்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது பேட்டி!

**சென்னை, அக். 28- ஆளுநர் மாளிகை சாலையில் வீசப்பட்ட பெட்ரோல் பாட்டில் விஷயம் இட்டுக்கட்டி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இது ஆளுநர் மாளிகையால் மிகைப்படுத்தப்பட்ட செயல் என்றும் மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது சன் நியூஸ் தொலைக் காட்சி - கேள்விக் களம் விவாதத்தின்போது ஆணித்தரமாக குறிப்பிட்டார்.**

இதுகுறித்து மூத்த பத்திரிகையாளர் ஷபீர் அகமது அளித்த பேட்டி வருமாறு:-

**நெறியாளர் குணசேகரன்:** ஷபீர் நாம் பேசிக்கொண்டு இருக்கும் போதே டி.ஜி.பி. ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறார். ஆளுநர் மாளிகையில் அத்துமீறி நுழைந்தார்கள் என்று ராஜ்பவன் சொல்லியது தவறு. ஒன்றுக்கு மேலே இரண்டாவது குண்டு வீசினார்கள் என்று சொல்வதும் தவறு. இதில் நியாயமான முறையில் நாங்கள் விசாரணையை நடத்துவோம். கவர்னர் - ராஜ்பவன் சொல்லக்கூடிய ஒரு கருத்து ஏற்கனவே கோயம்புத்தூரில் காரில் சிலிண்டர் வெடிக்கின்ற அந்த சம்பவத்தில் கூட தடயங்கள், ஆதாரங்களைக் கூட அழிச்சுட்டாங்க என்று ட்விட் போட்டார்கள். எந்த ஆதாரத்தை யார் அழிச்சாங்க என்று கேட்டதற்கு அவர்களிடத்தில் இருந்து பதில் இல்லை. இப்போது கவர்னர் ஸ்டேட்மெண்ட் கொடுப்பதும், இதற்கு டி.ஜி.பி. மறுப்பதும் என்கிற போக்கு என்பது ஒரு நியூ லோ இல்லையா.?

**ஷபீர் அகமது:** (பத்திரிகையாளர்) நிச்சயமாக இது ‘நியூ லோ’ தான். ராஜ்பவனுடைய செயல்பாடு என்பது இதில் ஒரு கேள்விக் குறியாக உள்ளது. வெடிகுண்டு வீசியவரை காவலில் இருந்தவங்க கைது செய்றாங்க, அவரை போலீசில் வைத்து விசாரணை செய்கிறார்கள்.

ஒன்றிய அரசினுடைய உளவுத்துறை அதிகாரிகள் கூட காவல் நிலையத்தில் வைத்து அவரை விசாரித்து இருக்கிறாங்க. அவருடைய பின்புலம் பற்றி விசாரித்து இருக்கிறார்கள். இவை எல்லாம் ஒரு மணி நேரத்தில் நடந்திருக்கின்றது. ஏற்கனவே இவரைப் பற்றி தெரியும். இவர் பழைய குற்றவாளி என்பதில் போலீஸ் ரிக்கார்டு கிளியராக இருக்கின்றது. அப்போது இவர் எங்கே இருந்து வந்தார், எங்கே இருந்து மூவ் செய்தார். யாரை மூன்று நாட்களுக்கு முன்பு சந்தித்தார். இல்லை சிறையில் இருந்து வெளியே வந்ததற்குப் பிறகு இவர் யார் யாரை பார்த்து இருக்கிறார் என்கின்ற எல்லாத் தகவல்களையும் காவல் துறையினர் ஒரு இரண்டு மணி நேரத்தில் அவற்றையெல்லாம் விசாரித்து விட்டார்கள்.

அதையும் தாண்டி ஆளுநர் மாளிகை இட்டுக்கட்டி ஒரு புகாரை கொடுத்து இருக்கிறார்கள் என்கின்றபோது, இன்றைக்கு டி.ஜி.பி. - அதாவது தமிழக காவல்துறை தலைவர் அதிகார பூர்வமா ஆளுநரை, ஆளுநர் மாளிகை சொல்லி இருக்கக் கூடிய செய்தியை மிகைப்படுத்தக் கூடிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்கின்றபோது இது ஒரு ‘நியூ லோ’.



கவர்னர் தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்கிறார். அவர் மீது ஒரு விமர்சனம் முன் வைக்கப்பட்டால் அதனை மிகவும் கடுமையாக எடுத்துக்கொள்கிறார். என்னை எல்லோரும் சேர்ந்து டார்க்கெட் செய்றாங்கன்னு சொல்கிறாரா என்று புரியவில்லை.

ஆளுநர் ஒரு கருத்தைச் சொல்கிறார் என்றால் அதற்கு யாருமே மறு கருத்து சொல்லக் கூடாது, என்று அவர் நினைக்கிறாரா? என்னவென்று தெரியவில்லை. அரசியல் சட்ட ரீதியில் அவர் பல இடங்களில் பேசுவதை யாரும் மறுத்துப் பேசுவது கிடையாது.

அரசியல் ரீதியாகவும், ஐடியாலஜிக்கலாகவும், சித்தாந்த ரீதியாகவும் ஆளுநர் பேசும்போது அங்கே தான் பிரச்சினை வருகின்றது.

அவர் பேசும்போது இதற்கெல்லாம் ஒரு எதிர்வினை இருக்கும் என்பது, அவருக்கு தெரிந்திருக்கும். எனவே எதிர்வினையை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். ஆனால் நான் ஆளுநராக இருக்கின்றேன். என்னை யாரும் எதிர்க்கக் கூடாது என்கின்ற ஒரு மனநிலையில் அவர் இருக்கின்றார்.

இன்னும் அவர் ஐ.பி.எஸ். அதிகாரி யாகவே அங்கே இருக்கின்றார்.

நாகலாந்தில் கூட இதே மாதிரி தான் ஒரு நிலை இருந்தது. எந்த ஆளுநரும் ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாறுதலில் செல்கிறார் என்றால் அந்த ஊர் மக்கள் கொண்டாடி மகிழ்ந்த வரலாறே கிடையாது. அது ஆளுநர் ரவி அவர்களுக்கு இருக்கு.

ஏன் என்றால் அங்கே இருக்கக்கூடிய அமைப்புகள் அறிக்கையே கொடுத்தார்கள். இந்த ஆளுநர் நாகாலாந்தில் இருந்த வரைக்கும் ஒருமுறை கூட பத்திரிகையாளர்களை சந்தித்தது இல்லை. ஒரு முறை கூட இந்த மாநில மக்களை சரியாக நடத்தவில்லை. அந்த மாநில மக்கள் இவர் மாறுதல் செய்யப்பட்டதை கொண்டாடினார்கள்.

அந்த அடிப்படையில் தான் இங்கேயும் அதே மாதிரியான ஒரு நிலையை அவர் ஏற்படுத்துகிறார். இவை எல்லாம் தேவையே இல்லாத ஒரு விஷயம். ஒரு சம்பவம் நடக்கிறது. அங்கே பாதுகாப்பு இருக்கு. நீங்கள் சாதாரணமாக ராஜ்பவனுக்குள் போய்விட முடியாது. அந்தப் பக்கம் ஆளுநருக்கு எதிர்ப்பு அதிகமாக இருக்கின்றது என்பதனால் “பேரிகேட்ஸ்” போட்டு இருக்கிறார்கள்.

கேட்டுக்கு வெளியேயும் பேரிகேட்ஸ் போட்டு இருக்காங்க. அதனை தாண்டி உள்ளே போகவே முடியாது. நீங்கள் அந்தப்பக்கம் போனால், கொஞ்சம் சந்தேகப்பட்டால் கூட அங்கே இருக்கக்கூடிய காவல்துறை அதிகாரிகள் உங்களைப் பார்த்து கேட்பார்கள்.

அப்படி இருக்கும்போது பெட்ரோல் பாட்டிலை வீசும்போது, உடனடியாக அங்கே இருந்த காவலர்கள் சாலையை கடந்துபோய் அவரை மடக்கிப்பிடித்து விடுகிறார்கள்.

அதற்கப்புறம் அவர் என்ன சொல்கிறார். ஒரு கும்பல் உள்ளே புக வந்தது. ஆயுதங்களோடு உள்ளே வந்து போனாங்க. இன்னொன்று அவர் மிகவும் கவனமாக செயல்படுகிறார். ராஜ்பவன் “ட்விட்”

அங்கே இருந்து வந்த ‘ட்விட்’ பார்த்தோமேயானால், வெடிகுண்டுகளுடன் வந்தாங்க என்று சொல்கிறார்.

“பெட்ரோல் பாம்” என்பது சாதாரணமாக கிடைக்கக் கூடிய ஒரு பொருள். அப்போது அந்த விஷயத்தைக் கூட ஒரு பூதாகரமாக மிகைப்படுத்தி பேசக் கூடிய ஒரு நடவடிக்கையாகத்தான் நாம் கருத வேண்டி இருக்கு.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல காவல் துறையினர் அந்த விநோத்தை தொடர்ச்சியாக விசாரித்து இருக்கிறார்கள். விசாரித்ததில் அவருடைய பேக்ரவுண்ட் என்ன? சிறையில் அவர் யாருடன் இருந்தார். அவரை சிறையில் யாராவது தூண்டிவிட்டார்களா. சிறையில் இருந்து வெளியே வந்ததற்குப் பிறகு யாரை சந்தித்து இருக்கிறார். அவருக்கு பின்புலமாக அரசியல் பேக்ரவுண்ட் இருக்கிறதா? என்று எல்லாவற்றையும் விசாரிக்கும் போதுதான். அதில் ஒரு விஷயம் வருகின்றது. திருவாரூர் பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவில் இருக்கக்கூடிய நபர் இவரை ஜாமினில் எடுத்து இருக்கிறார் என்கிற போது; இந்தத் தகவலை சட்டத் துறை அமைச்சர் பதிவு செய்து இருக்கிறார். அப்போ; ஏதோ ஒரு இடத்தில் இவர்களுக்கு பா.ஜ.க. கனெக்ஷன் இருக்கிறது. இங்கே எஸ்டாபிளிஸ் ஆகின்றது என்கின்ற போதுதான் பல்வேறுவிதமான கேள்விகள் எழுகின்றன.

ஆளுநர் மட்டும் ஒரு அறிக்கையை கொடுத்தால் இந்த கனெக்ஷன் என்ன என்பதையும் விசாரிக்க வேண்டும் என்பது ஆளுநருடைய - ஆளுநர் மாளிகை வைக்கக்கூடிய ஒரு கோரிக்கையாக இருக்கும்.

இந்தச் சம்பவம் என்பது ஆளுநர் மாளிகையால் மிகைப்படுத்தப்பட்ட ஒரு சம்பவமாகத்தான் நான் பார்க்கிறேன். ஏனென்றால் நடந்தது பெட்ரோல் குண்டை ஒருவர் வீசினார் என்றாலும் கூட அதனை தைரியமாக அங்கே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள் போய் அவரை மடக்கிப் பிடித்து இருக்கிறார்கள். வீசிவிட்டு ஓடியிருந்தால் கூட நிலைமை மோசமாக போயிருக்கும். ஏனென்றால் யாரோ ஒரு நபர் அதனை வீசிவிட்டு ஓடிப்போய்விட்டார். தப்பித்து போய்விட்டார். காவல்துறை இதில் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பார்கள்.

ஆனால் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு அந்த நடவடிக்கையை எடுத்தபோது ஆளுநர் மாளிகை அதனை பாராட்டி இருக்க வேண்டும். அவர் அதிலும் என்ன சொல்கிறார் என்றால் சென்னை போலீசாரை பாராட்டாமல் சென்ட்ரி வந்து பிடித்தார்கள் என்று சொல்கிறார். ஆளுநர் மாளிகைக்குள் இருக்கின்ற செக்யூரிட்டி அரேஞ்ச்மென்ட் என்பது சி.ஐ.எஸ்.எஃப். ஆகும். ஆளுநர் மாளிகைக்கு வெளியே சென்னை போலீசார் பாதுகாப்பு அளிக்கின்றனர்.

சென்னை போலீசுக்கு குறைந்தபட்சம் அவர்கள் விசாரித்து உண்மையை சொல்லக்கூடிய ஒரு அவகாசத்தை ஆளுநர் மாளிகை கொடுத்திருக்க வேண்டும்.

இன்னொன்று ஆளுநர் மாளிகையில் இருந்து கொடுக்கப்பட்ட அந்த புகார் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு எப்போது கிடைக்கிறது என்றால் 8 மணிக்கு மேல்தான் கிடைக்கின்றது. அதற்கு முன்பே 5 மணிக்கு சென்னை போலீசார் எப்.ஐ.ஆர். பதிவு செய்து விடுகிறார்கள். குற்றவாளியையும் கைது செய்து விடுகிறார்கள். அதற்கான நடைமுறைகள், விசாரணைகள் அனைத்தும் நடைபெறுகிறது.

தற்போது அந்த நபரை போலீஸ் கஷ்டடியில் எடுத்து விசாரிப்பதற்கான நடவடிக்கையை காவல்துறையினர் எடுக்கிறார்கள். ஏனென்றால் இதில் ஒரு கேப் இருக்கக்கூடாது என்பது காவல்துறையின் ஒரு எண்ணமாக இருக்கலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆளுநர் மாளிகையின் புகார் - அனைத்தும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது!

## காவல்துறை தலைமை இயக்குநர் அறிக்கை!

சென்னை, அக். 28-

“ஆளுநர் மாளிகை அளித்த புகார் அனைத்தும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது” என்று காவல் துறை தலைமை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து காவல்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

25.10.2023 அன்று மதியம் 3 மணியளவில், கருக்கா வினோத் (42 வயது இ3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தின் வழக்கமான குற்றவாளி) என்பவர் சர்தார் படேல் சாலை வழியாக ஆளுநர் மாளிகை அருகே தனியாக பாதசாரி போன்று நடந்து வந்தார். அவர் பெட்ரோல் நிரம்பிய நான்கு பாட்டில்களைக் கொண்டுவந்து, அவற்றை ஆளுநர் மாளிகை அமைந்துள்ள சர்தார் படேல் சாலையின் எதிர்ப்புறத்தில் இருந்து எறிய முற்பட்டபோது, ஆளுநர் மாளிகை வெளிப்புறத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த தமிழ்நாடு காவல்துறை போலீசாரால் தடுக்கப்பட்டார். கைது செய்யப்படுவதற்கு பயந்து, சம்பவ இடத்திற்கு எதிரே சற்று தூரத்திலிருந்து இரண்டு பாட்டில்களை வீசினார். அவை ஆளுநர் மாளிகையின் அருகே சர்தார் படேல் சாலையில் வைக்கப்பட்டிருந்த தடுப்பரண்களுக்கு அருகே விழுந்தது.

பின்னர், அவர் ஆளுநர் மாளிகையின் பிரதான வாயிலிலிருந்து சுமார் 30 மீட்டர் தூரத்தில், பாதுகாப்பு போலீசாரால் உடனடியாக கைதுசெய்யப்பட்டு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவத்தால், பொருட்களுக்கோ அல்லது எந்த நபருக்கோ எவ்வித சேதமோ, காயமோ ஏற்படவில்லை. கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆராய்ந்ததில், மேற்படி நபர் தேனாம்பேட்டையிலிருந்து, சம்பவ இடம் வரை தனியாகவே வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. முதற்கட்ட விசாரணைக்குப் பிறகு, 25.10.2023 அன்று ஜெ3 கிண்டி காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மேற்படி அவர் 4வது பெருநகர குற்றவியல் நடுவர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, 09.11.2023 வரை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

#### வினோத் மீது 14-வழக்குகள்!

மேற்படி வினோத் ஏற்கனவே பல்வேறு குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். வினோத் மற்றும் அவரது கூட்டாளிகள் சௌத் போக் சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் 12.08.2015 அன்று பெட்ரோல் நிரம்பிய பாட்டில்களை வீசியுள்ளனர். அதேபோல் 13.07.2017 அன்று வினோத் மற்றும் அவரது கூட்டாளிகள் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் மண்ணெண்ணெய் நிரம்பிய பாட்டில்களை வீச முற்பட்ட போது காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வினோத் மீது 14 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

ஆளுநர் அவர்களுக்கு எதிராக பகிரங்க மிரட்டல், அவதூறுப் பேச்சு மற்றும் தாக்குதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், அவை தொடர்பாக காவல்துறையினர் நியாயமான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை எனவும், மேலும் அச்சம்பவங்கள் தொடர்பாக எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டு, 25.10.2023 அன்று மருத்துவர் டி.செங்கோட்டையன் (ஆளுநரின் துணைச் செயலாளர்) புகார் அளித்துள்ளார்.

#### தனிப்பட்ட நபரால் செய்யப்பட்ட செயல்!

25.10.2023 அன்று நடந்த சம்பவம் ஒரு தனிப்பட்ட நபரால் ஆளுநர் மாளிகைக்கு வெளியே சர்தார் படேல் சாலையில் செய்யப்பட்ட செயலாகும். இந்த நிகழ்வில் புகாரில் தெரிவிக்கப்பட்டது போல் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது எனவும், அவர்கள் அத்துமீறி ஆளுநர் மாளிகையினுள் நுழைய முற்பட்டு ஆளுநர் மாளிகை வாயிற் காப்பாளர்களால் (Sentry) தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும், மேலும் அங்கு வீசப்பட்ட பெட்ரோல் குண்டு வெடித்தது என்றும் சொல்வது அனைத்தும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.

அதேபோல் ஏப்ரல் 19, 2022 அன்று மயிலாடுதுறை சென்ற போது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது என்றும், இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதும் உண்மைக்கு புறம்பானது. ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்றபின்னர் அங்கு கூடியிருந்தவர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்றபின் பின்னால் வந்த வாகனங்கள் மீது விழுந்தன. இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 73 பேர் கைது செய்யப்பட்டனர். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. மேற்படி சம்பவங்கள் அனைத்திற்கும் காணொளி ஆதாரங்கள் உள்ளன.

மேலும், ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். மேலே குறிப்பிட்டுள்ளது போன்று எந்தவித சம்பவங்களும் நடைபெறவில்லை.

#### உடனடியாக கைது!

ஆளுநர் மாளிகையின் பாதுகாப்பிற்காக சர்தார் படேல் சாலையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சென்னை பெருநகர காவல் துறையின் பாதுகாப்புக் காவலர்கள் விழிப்புடன் இருந்த காரணத்தினாலும், பலத்த காவல் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்ததாலும், உடனடியாகக் குற்றவாளி கைது செய்யப்பட்டார். மேற்படி வழக்கில் முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும். ஏற்கனவே, கண்காணிப்பு கேமரா பதிவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டுள்ளன. மேற்படி வழக்கில் முழுமையான நியாயமான விசாரணை மேற்கொள்ளப்படும்.

மேதகு ஆளுநர் அவர்களுக்கும் மற்றும் அவரது மாளிகைக்கும் தமிழ்நாடு காவல் துறையினரால் உரிய பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு காவல்துறையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### ‘பாரத்’ பெயர் மாற்றம்: மதச்சார்பற்ற – ஜனநாயகக் கூட்டாட்சித் தன்மை கொண்ட

# நவீன இந்தியாவைச் சீர்குலைக்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 28-

‘தீக்கதிர்’ நாளிதழின் நேற்றைய (27.10.2023) பதிப்பில், “பெயர் மாற்றம் மட்டும் அல்ல” எனும் தலைப்பில் வெளியான தலையங்கத்தில், “மதச்சார்பற்ற, ஜனநாயக, கூட்டாட்சித் தன்மை கொண்ட நவீன இந்தியாவைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 27 வெள்ளிக்கிழமை

பெயர் மாற்றம் மட்டும் அல்ல...

பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான பாடப்புத்தகங்களில் இடம் பெற்றுள்ள 'இந்தியா' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பாரத்' என்று மாற்றப்பட வேண்டும் என பள்ளிப் பாடத்திட்டத்தை திருத்துவதற்காக என்.சி.இ.ஆர்.டி நியமித்துள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. இது தேவையற்ற வேலை என்பதோடு மாணவர்களிடையே வீண் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பணவீக்கம் என பல்வேறு பிரச்சனைகளில் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், மக்களது கவனத்தை திசை திருப்பும் வகையில்

‘தீக்கதிர்’ தலையங்கம் வருமாறு:-

பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான பாடப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ள ‘இந்தியா’ என்ற வார்த்தைக்குப் பதிலாக ‘பாரத்’ என்று மாற்றப்பட வேண்டும் என பள்ளிப் பாடத்திட்டத்தை திருத்துவதற்காக என்.சி.இ.ஆர்.டி நியமித்துள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. இது தேவையற்ற வேலை என்பதோடு மாணவர்களிடையே வீண் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும்.

வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, பணவீக்கம் என பல்வேறு பிரச்சனைகளில் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், மக்களது கவனத்தை திசை திருப்பும் வகையில் பல்வேறு வேலைகளில் நரேந்திர மோடி அரசு ஈடுபட்டுள்ளது. நாட்டு மக்களிடையே பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் பல்வேறு அறிவிப்புகளை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே இந்த பெயர் மாற்ற வேலையும் அமைந்துள்ளது எனலாம்.

இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில் ஒரு இடத்தில் ‘பாரத்’ என்ற பெயர் இடம் பெற்றுள்ளது என்பது உண்மைதான். எனினும் அரசியல் சட்டம் துவங்கி அனைத்து ஆவணங்களிலும் இந்தியா என்கிற பெயரே நிலை பெற்றுள்ளது. அரசியல் நிர்ணய சபையில் நாட்டினுடைய பெயர் எவ்வாறு இடம் பெற வேண்டும் என நீண்ட நெடிய விவாதங்கள் நடைபெற்று முடிவில் இந்தியா என இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஜி20 மாநாட்டுத் தலைவர்களுக்கான விருந்து அழைப்பிதழில் முதன்முறையாக குடியரசுத் தலைவரின் பெயருக்கு முன்பாக பாரத் என்கிற பெயர் இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து மாநாட்டில் பிரதமரின் இருக்கைக்கு முன்பு பாரத் என்கிற பெயர் எழுதப்பட்டிருந்தது. நாட்டின் பெயரையும் மாற்றப் போவதாகச் செய்தி வெளியாகி பின்னர் அது மறுக்கப்பட்டது.

ஆனால் அறிவிக்காமலேயே நாட்டின் பெயரை பாரத் என்று மட்டும் அழைப்பதற்கான பணியில் ஒன்றிய அரசு கொஞ்சம் கொஞ்சமாக ஈடுபட்டுள்ளது. அதற்கு ஒத்திசைவாகவே என்.சி.இ.ஆர்.டி குழுவின் பரிந்துரை அமைந்துள்ளது.

பாரத் என்று பெயரை மட்டுமல்ல, மதச்சார் பற்ற நாடு என்ற உள்ளடக்கத்தையே மாற்ற முயற்சி நடக்கிறது. ஏற்கெனவே பாடத்திட்டத்தில் பல்வேறு குழப்பங்களை ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. வரலாற்றை புராண அடிப்படையில் திருத்தி எழுதுகிறது. அறிவியலுக்கு பதிலாக புனை கதைகளைப் புகுத்துகிறது.

ஆர்.எஸ்.எஸ். இந்த நாட்டை ‘ஆரிய வர்ஷம்’ என்று அழைக்க வேண்டும் என்று கூறுகிறது. இதற்கான பரிந்துரைகூட அடுத்து வரக் கூடும். மதச்சார்பற்ற, ஜனநாயக, கூட்டாட்சித் தன்மை கொண்ட நவீன இந்தியாவை சீர்குலைக்க மேற் கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள

# 5 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

வேலூர், அக். 28-

வரைவு வாக்காளர் பட்டியலில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணையம் வாய்ப்பு வழங்கி உள்ளதின் அடிப்படையில் என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப்பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம், 2024இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஏதுவாக வேலூர் மாவட்டத்தில் 27.10.2023 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதனை தொடர்ந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் சிறப்பு முகாம் நடத்தவும் ஆணையிட்டுள்ளது.

#### சிறப்பு முகாம் நடைபெறும் நாள்

04.11.2023 சனிக்கிழமை, 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை, 18.11.2023 சனிக்கிழமை, 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

27.10.2023 முதல் 09.12.2023 பெயர் சேர்த்தல் / நீக்கம் / திருத்தம் / முகவரி மாற்றம்

எனவே மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், தலைமை



செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர் கிளை கழக நிர்வாகிகள் குறிப்பாக BLA 2 மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆகியோர்கள் மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி நடைபெற உள்ள சிறப்பு முகாமை பயன்படுத்தி அதிகப்படியான தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் இறுதி பட்டியலில் இடம்பெறச் செய்ய தொய்வின்றிப் பணியாற்றிட வேண்டும் என கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.



நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் ரூ. 58 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார்.

# ஆளுநர் ஆர்.என்.ரவி வரலாறு தெரியாமல் பேசுகிறார்

# திராவிடம்-ஆரியம் பற்றி வரலாற்றில் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுகள் உள்ளன!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாதத்தில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் விளக்கம்!

சென்னை, அக். 28 -

**திராவிடம் - ஆரியம் பற்றி வரலாற்று நூல்களில் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவுகள் உள்ளன; ஆளுநர் ரவி வரலாறு தெரியாமல் பேசுகிறார் என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் விளக்கமாக குறிப்பிட்டுள்ளார்.**




‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு , “ஆளுநர் ரவியை விமர்சிக்க தயக்கம் காட்டும் இ.பி.எஸ். திராவிடத்தை ஆதரிக்க அச்சமா?” என்ற தலைப்பு கொண்டு நடைபெற்ற ‘கேள்விக் களம்’ விவாதத்தில் திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பேட்டியளித்தார்.

**நெறியாளர் மு.குணசேகரன்:** ஆளுநர் ஆர்.என். ரவி தொடங்கி வைத்த ஒரு சர்ச்சை என்பது பல பரிமாணங்களில் பேசப்பட்டு வருகிறது. ஆளுநருடைய பேச்சை நீங்கள் எப்படி புரிந்து கொள்கிறீர்கள்?

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** ஆளுநர் அவர்கள் எதையாவது பேசிவிட்டு நம் எல்லோருடைய நேரத்தையும் வீணாக்குகிறார் என்பது தான் என்னுடைய முதல் பார்வை. ஒரு விவாதத்திற்குரிய பொருளே இது இல்லை என்று நான் கருதுகிறேன். ‘ஆரியம் திராவிடம் என்று எதுவுமில்லை, ஆங்கிலேயர்கள் அதை உருவாக்கினார்கள். ராபர்ட் கால்டுவெல் அதைச் சொன்னார்’ என்று சொல்வதெல்லாம் மீண்டும், மீண்டும் அவர் ஐ.பி. எஸ். படித்து இருக்கிறாரா? என்கின்ற ஐயத்தை எனக்குள் உருவாக்குகிறது.

எடப்பாடி நேரடியாகச் சொன்னதைப் போல ‘எனக்கு ஒன்றும் தெரியாது’ என்றாவது சொல்லிவிட்டுப் போக வேண்டும். இரண்டு பேரையும் நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால், எடப்பாடி ‘எதுவும் தெரியாது’ என்கிறார். இவர் தெரிந்தது போல பேசுகிறார்.

beware of false knowledge என்று பெர்னாட்ஷா சொல்கிறார் it is more danger ous than ignorance. அதாவது அறியாமையை விட இந்த தவறான அறிவு என்பது ஆபத்தானது, beware of false knowledge என்று படித்தது தான் என் நினைவுக்கு வந்தது. நான் இப்படி சொல்லி விடுகிறேன். ஆரியம் திராவிடம் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை என்று சொன்னால், பாரதியாரிடமிருந்து தொடங்குவதா? இல்லை குறுந்தொகையில் இருந்து வருவதா என்று எனக்குத் தெரியவில்லை. பாரதியார் எத்தனை இடங்களில், தேசிய கீதங்களில் மட்டும் 24 இடங்களில் ‘ஆரிய’ என்கிற சொல்லை பயன்படுத்தி இருக்கிறார். ஆரிய பூமியில் நாரியரும் நர சூரியரும் சொலும் வீரிய வாசகம் எனும் பாடலில் வந்தே மாதரம் ஜெய வந்தே மாதரம் என்கிறார். ஆரியர்கள் வந்தே மாதரம் என்று சொல்வார்கள் என்கிறார். 24 இடங்களில் இது இருக்கிறது.

சோழர்கள் காலத்து கல்வெட்டில் இருக்கிறது. சோழர்களுடைய பாணியர்கள் கல்வெட்டில் தமிழ் பாடியோர் நால்வர், ஆரியம்பாடியோர் மூவர் என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னமும் பின்னால் திரும்பிப் பார்க்கிறேன், குறுந்தொகையில் ஏழாவது பாடல், பெரும் பதும்பனார் என்பவர் எழுதி இருக்கின்ற பாட்டு. அந்தப் பாட்டில் ஆரியம் என்கின்ற சொல் எப்படி வருகின்றது என்றால், ஒரு காதலனும் காதலியும் பாலை வழியாக நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலை எப்படி இருக்கிறது. அந்தப் பாட்டில் நல்லோர் யார் கொல் அளியர் தாமே இந்த இரண்டு பேரும் நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்களே, யாரு?

ஆரியன் கயிறாடு பறையின் கால் பொரக் கலங்கி’

என்ற பாட்டு. அப்போதெல்லாம் கயிற்றின் மேல் கூத்தாடுகின்றவர்களுக்கு ஆரியர்கள் என்று சங்க காலத்தில் பெயர் இருந்திருக்கிறது. அந்தக் கயிற்றின் மேல் ஆடுகின்ற ஆரியன் கயிறாடு பறை; அவர்கள் கயிறு ஆடுகின்ற போது கீழே அடிக்கின்ற பறை போல இங்கே மூங்கில் காடுகளில் இருந்து சத்தம் வருகிறது.

இதில் நடந்து கொண்டு போயிருக்கிறார்களே ‘நல்லோர் யார் கொல் அளியர்’ என்று பெரும்பதுமனார் குறுந்தொகையை ஆங்கிலேயர் எழுதினார்களா என்று ஆளுநரை கேட்க வேண்டும். அது தெரியவில்லை. ஆரியம் என்கின்ற சொல் ஆங்கிலேயர் வந்த பிறகு வருகிறது என்றால் குறுந்தொகையில் அந்தச் சொல் இடம் பெற்றிருக்கிறதே எப்படி?

சரி, திராவிடம் என்ற அப்படி ஒரு சொல்லே இல்லை என்றால் எதற்காக ஆதி சங்கரர் சம்பந்தரைப் பார்த்து ‘திராவிட சிசு’ என்று சொன்னார் ?

எதற்காக ஆரியம் கண்டாய், தமிழன் கண்டாய் என்று தேவாரம் சொல்கிறது. எதற்காக மாணிக்கவாசகர் ஆரியம் என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார்? ‘திராவிட சிசு’ என்று சொல்லும் போது, அப்படியானால் யார் அந்த திராவிடர்.?

அந்த திராவிடம் என்பது சரியா தவறா என்பதெல்லாம் வேறு. இவை எல்லாம் நான் சொல்லுகின்ற இலக்கியச் சான்றுகள்.

வரலாற்றில் இருந்து சொல்ல வேண்டும். நம்முடைய எடப்பாடி அவர்கள் சொல்வதைப் போல புராணங்களில் இருந்து அல்ல, வரலாற்றில் இருந்து, நம்முடைய வரலாற்று ஆசிரியர்கள் எழுதி இருப்பது அல்ல. பேராசிரியர் என்.சுப்பிரமணியன் அவருடைய ஹிஸ்டர் ஆப் இந்தியா 1964 இல் வந்தப் புத்தகம் அது.

அதனுடைய முதல் பகுதி, இரண்டாவது பகுதி 1969 இல் வந்தது. அரசாங்கத்தினுடைய சிறப்பு விருதைப் பெற்ற புத்தகம்.

ஹிஸ்டரி ஆப் இந்தியா அதில் பகுதி ஒன்று, மூன்றாவது அத்தியாயம். அதில் இந்தியாவின் மிகப் பெரும்பான்மையாகப் பேசப் படுகின்ற இனங்கள் இரண்டு, ஒன்று திராவிட இனம், இன்னொன்று ஆரிய இனம் என்கிறார்.

அவர் ஒன்றும் தி.மு.க.வின் உறுப்பினர் அல்ல. டாக்டர் கே.கே. பிள்ளை “தமிழக வரலாறும் பண்பாடும்” என்கின்ற நூலில் ஆரியம் - திராவிடம் பற்றி எழுதி இருக்கிறார். டாக்டர் இ.மா.ராசமாணிக்கனார் “தமிழக வரலாறும் பண்பாடும்” என்கின்ற நூலில் எழுதி இருக்கிறார். இன்னும் ஆயிரம் சான்றுகள் இருக்கின்றன.

நான் முதலில் சொன்னதைப் போல மிகத் தெளிவாக இருக்கின்ற ஒன்றை இல்லை என்று ஒருவர் ஆளுநராக இருக்கின்ற காரணத்தால் அவருக்கு விளம்பரமும் பிரச்சாரமும் இயல்பாக எந்தச் செலவும் இல்லாமல் கிடைத்து விடுகிறது. நமக்கு நேரம் முழுவதும் வீணாகிக் கொண்டிருக்கிறது.

**நெறியாளர்:-** நேரத்தை வீணடிக்கிறார் என்கிறீர்கள். இலக்கியச் சான்றுகள் ஆரியம் தொடர்பான குறிப்புகள் இருக்கு., திராவிடம் தொடர்பான குறிப்பும் இருக்கு , ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே ஆரியம் திராவிடம் இருக்கிறது என்று கூறுகிறீர்கள். ஆளுநர் சொல்லக் கூடிய ஒரு கருத்து என்ன வென்றால் ஆரியம் திராவிடம் அப்படி என்கின்ற இந்த வேறுபாடே செயற்கையாக தவறாக வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அப்படி என்ற ஒரு கோட்பாட்டுக்குள் இருந்து பேசுகிறார். அதனை பலரும் அம்பேத்கர் அவர்களை கூட மேற்கோள் காட்டி சொல்லக்கூடிய தன்மையை பார்க்கிறோம்.

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** இதில் இரண்டு செய்திகள். இது ஆங்கிலேயர்கள் உருவாக்கியது என்றால், நீங்கள் ஏன் ஒரு ஏவுகணைக்கு ‘ஆரியபட்டா’ என்று பெயர் வைத்தீர்கள். ‘ஆரிய பட்டா’ என்று அரசாங்கம் ஏன் பெயர் வைத்தது?

அம்பேத்கர் அவர்கள் 1946 இல் who are suthras என்கிற புத்தகம் எழுதுகின்ற போது ஒரு குறிப்பைச் சொல்கிறார். அதில் இது ஒரு Myth சொல்வது உண்மை. அதனைச் சொல்கின்றவர்கள் அதற்குப் பின்னால் அம்பேத்கர் எழுதிய நூலில் ஒரு கட்டத்தில் ‘நான் கருதியதாக இல்லை. அது இந்த நாட்டின் வரலாற்றின் ஒரு பகுதி என்று சொல்கிறாரே அதற்கு இவர்கள் என்ன சொல்கிறார்கள். அல்லது இவர்கள் ஒரு புத்தகம் மட்டும் தான் படிப்பார்களா? அல்லது செலக்டிவ் அம்னீஷ்யா, இவர்களுக்குத் தேவையானதை சிந்தனையில் வைத்துக்கொண்டு மற்றதை மறந்து விடுவார்களா? அம்பேத்கரை மேற்கோள் காட்டுகின்ற இவர்கள். அம்பேத்கர் இந்து மதத்தைப் பற்றிச் சொல்லி இருப்பதை எல்லாம் ஆளுநர் ரவி அவர்கள் எடுத்துச் சொல்வாரா? அல்லது அதைப்பற்றி பேச அவர் தயார்தானா, நாங்கள் தயார்.

அம்பேத்கர் இந்து மதத்தைப் பற்றி, பார்ப்பனர் பார்ப்பனீயம் பற்றி அவர் பேசி இருக்கின்றதை பெரியாருக்கு கொஞ்சமும் குறைவில்லாமல் பேசி இருக்கிறார். 1927இல் டிசம்பர் 25 ஆம் தேதி மனுஸ்மிருதியை எரிக்கின்ற போது அம்பேத்கர் பேசிய பேச்சு இன்னமும் நெருப்பு பறக்கின்ற ஒரு உரை.

ஆகையினால் அம்பேத்கரை தேவையான ஏதோ ஒரு இடத்தில் அதற்கான கருத்தை அவரே மாற்றிக் கொண்ட பிறகு நாம் எப்படி பழைய கருத்தை மேற்கோள் காட்டக் கூடாது என்றால், பாரதிதாசன் 1925 க்கு முன்னால் பாடிய மயிலம் சுப்பிரமணியத் துதி அல்ல பாரதிதாசன். மாற்றம் வந்ததற்குப் பிறகு எது என்பதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல 1950 களில் கண்ணதாசனின் கருத்துகள் தான் கடைசி வரைக்கும் அவருடன் இருந்தன என்று சொல்ல முடியாது. அவர் பின்னால் வந்ததற்குப் பிறகு பழைய கருத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.

**நெறியாளர்:** ஆளுநர் ஒரு விமர்சனத்தை தொடங்கி வைக்கிறார். அ தற்கு டி.ஆர்.பாலு கண்டனம் தெரிவிக்கிறார். தி.மு.க. கடும் எதிர்வினையாற்றுகிறது. திருமாவளவன் எதிர்வினை யாற்றுகிறார். மற்றவர்கள் பேசுகிறார்கள். அ.தி.மு.க. இதனை எதிர்வினை என்று எடுத்துக் கொண்டால். இரண்டு கோணங்கள் இருக்கின்றது. ஒன்று சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திராவிட இயக்க ஆட்சியாளர்கள் மறைத்து விட்டார்கள். அவர்களுக்குரிய மரியாதையை தரவில்லை என்று சொல்லப்படும் போது, தமிழ் நாட்டில் அது தி.மு.க. மேல் மட்டும் அல்ல அ.தி.மு.க. மேலேயும் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு ஆளுநர் வைப்பது. இன்னொன்று திராவிடம் பற்றிய கருத்து. அதில் அ.தி.மு.க. ஆளுநர் குற்றச்சாட்டை மறுக்கவும் இல்லை. அவரை கண்டிக்கவும் இல்லை. இந்த ஆய்வு என் ஏரியா இல்லை என்று எடப்பாடி பழனிச்சாமி சொல்வது இதில் ஒரு ஆனஸ்ட்டா இல்லை அவருக்கு இன்ட்ரஸ்ட் இல்லை அப்படி என்று புரிந்து கொள்வதா அது சார்ந்த உங்கள் பார்வை?

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** அமைச்சர் உதயநிதி அவர்கள் சொல்லி இருப்பதுபோல் அவருக்கு அவ்வளவு பயமா? அவருக்கு ஆளுநர் சொன்னதற்கு கருத்து சொல்வதற்கு கூட அத்தனை அச்சம் இருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். எல்லோருக்கும் எல்லாவற்றையும் தெரிந்து இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இதனால் எடப்பாடியின் அறிவு குறைவானது என்று கூட நான் எடுத்துச் சொல்லவில்லை. அவர் ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறார். அதுவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சியின் பொதுச்செயலாளராக இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமி அடிப்படை திராவிடம் பற்றி எனக்கு எதையுமே தெரியாது என்று சொல்வது அவருக்கு அல்ல அந்தக் கட்சிகே அவமானம் என்று தான் நான் கருதுகிறேன். அடிப்படையில் சில செய்திகளையாவது அவர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

**நெறியாளர்:** இவையெல்லாம் ஆய்வாளர் பேச வேண்டியது . நான் ஆய்வாளர் அல்ல அப்படி என்று சொல்கின்ற போது அவரிடத்தில் ஒரு நேர்மை இருக்கிறது; தெரியாததை பேசுவதற்கோ அவர் தயாராக இல்லை.

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்:** உண்மைதான். நான் முதலிலே கூறினேன். அந்த அறியாமை என்பது அரைகுறை தவறானதை விட அறியாமையே மேல் என்பதை நான் எடுத்த உடனே சொன்னேன். ஆனால் அறியாமை அல்ல. எடப்பாடி அவர்கள் அப்படி எதுவுமே தெரியாமல் வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது என்றெல்லாம் என்னால் நம்ப முடியாது. இந்த வம்பு நமக்கு வேண்டாம் என்று அவர் கருதிக் கொண்டுதான், தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்வதாகத்தான் நான் நினைக்கிறேன்.

**நெறியாளர்:** பேராசிரியர்... உங்களின் நிறைவு கருத்து?

**பேராசிரியர் சுப. வீரபாண்டியன்:** அவர்கள் திராவிடத்தை மட்டும் சொல்லவில்லை. ஆரியமும் சேர்த்துத்தான். திராவிடம் ஆரியம் என்கின்ற பிரிவே பொய்யானது. அப்போ ஆரியம் என்பதும் இல்லை என்று தான் ஆளுநர் சொல்கிறார். திராவிடத்திற்கு ஆயிரம் சான்றுகளை நான் தர முடியும். அவர்கள் குறிப்பிட்டபடி ஆரியமும் இல்லை என்று அவர்கள் சொல்லத் தயாரா? அப்படியானால் அதற்காக திலகர் புத்தகத்தில் இருந்து கோல்வால்கர் புத்தகங்களிலிருந்து நாங்கள் எடுத்து காட்டுகிறோம்.

ஆரியத்தை பற்றி நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். இல்லை என்று சொல்ல முடியுமா? ஏனென்றால் நான் மிகவும் மதிப்போடு சொல்கிறேன் வரலாற்றை. 1944 ஜீன் அல்ல சேலத்தில் ஆகஸ்டில் நடந்தது, அதில் பொப்பிலி அரசரும், பனகல் அரசரும் கலந்து கொண்டார்கள் என்கிற புதிய செய்தியை இன்றைக்கு பாலகணபதி அவர்கள் மூலம் தான், நான் அறிந்து கொள்கிறேன்.

1920 இல் இறந்துபோன பனகல்அரசர் 1944 இல் எப்படி வந்து கலந்துகொண்டார் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே இவர்களின் வரலாற்று அறிவு இவ்வளவு கூர்மையாக இருக்குமானால் எனக்கு உண்மையாக கவர்னர் மட்டுமல்ல இப்படிப்பட்ட வரலாற்று அறிஞர்களோடும் நாம் விவாதிக்க வேண்டி இருக்கிறது என்று ஒரு வருத்தமாக இருக்கிறது. இது ஒரு பக்கம்.

இரண்டாவது நான் கேட்ட எந்தக் கேள்விக்கும் பாலகணபதி விடை சொல்லவில்லை. அம்பேத்கர் எந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கிறார் என்று கேட்டேன் சொல்லவில்லை. ஆரியம் திராவிடம் இரண்டும் மாயை என்றால் ஏன் ஆரியத்தைப் பற்றி தொடர்ந்து எல்லோரும் சங்க இலக்கியத்தில் இருந்து பேசுகிறீர்கள்.

ஏன் திராவிட சிசு என்று சொல்கிறீர்கள். இரண்டு சொற்களும் ஆங்கிலேயர்கள் வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இங்கே இருக்கிறதே என்ன காரணம். நான் சோழனுடைய அதாவது பெருவுடையார் கோயில் காலத்தில் சோழர்களின் பாணியர் கல்வெட்டில் தமிழ் நால்வர் தமிழ் பாடினர். மூவர் ஆரியம் பாடினர் . என்ற கல்வெட்டையும் எடுத்து காட்டினேன் எதற்கும் பதில் சொல்லவில்லை என்று சொன்னால் பிறகு நான் என்ன சொல்வது?

எனவே அடிப்படையாக ஒன்றைச் சொல்கிறேன், ஆரியம் திராவிடம் பற்றி வேறு எதுவும் இன்றைக்கு பேசுவதற்கு இல்லை என்றால் அதைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆரியர் திராவிடர் பிரச்சினை என்பது இயல்பாக எல்லா வரலாற்று நூல்களிலும் இருக்கின்றன. புராணத்தில் அல்ல, வரலாற்று நூல்களில் இருக்கின்றன. அழுத்தமாக இருக்கிறது பதிவு.

இவ்வாறு பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பேட்டி அளித்தார்.




மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாமன்னர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மருது சகோதரர்களின் குருபூஜை விழாவை முன்னிட்டு கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளர் மற்றும் அமைச்சர் மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் சோமசுந்தரபாண்டியன்,நேருபாண்டியன்,பெ. சசிகுமார், சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், மருது பாண்டியன், வாடிப்பட்டி பால்பாண்டி, பால ராஜேந்திரன், வீரராகவன் முருகன், ஆதிசங்கர், இளங்கோ, திருப்பாலை ராமமூர்த்தி, செங்கிஸ்கான் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாமன்னர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மருது சகோதரர்களின் குருபூஜை விழாவை முன்னிட்டு மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள அவர்களது திருவுருவச் சிலைக்கு மாநகர மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் வ.வேலுச்சாமி, பெ. குழந்தை வேலு, மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், முருகவேல், ஆர். எம்.முத்து மற்றும் திரளான கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## பொருளாதாரத்தில் பெண்கள் முன்னேறுவது

# நாட்டிற்கு மிகப் பெரிய பலனைத் தரும்!

## விருதுநகரில் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**விருதுநகர்,அக்.28-**

**“பொருளாதாரத்தில் பெண்கள் முன்னேறுவது நாட்டிற்கு மிகப் பெரிய பலனைத் தரும்” என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறினார்.**

**விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1051 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் 617 பயனாளிகளுக்கு ரூ.91.26 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 1668 பயனாளிகளுக்கு ரூ.92.52 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலமும் செயல்படுத்திடாத வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

### யாரும் விடுபட்டு விடக்கூடாது!

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த 1051 மகளிருக்கு பற்று அட்டைகள் இன்று வழங்கப்பட்டுள்ளன். 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தான் உரிமைத் தொகை வழங்குவதற்கான தேதி என்றாலும், ஒரு நாள் முன்னதாக 14 ஆம் தேதியே அரசால் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு வழங்கப்பட்டுள்ள பற்று அட்டைகள் பணம் எடுப்பதற்கான கார்டுகள் மட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையை மாற்றப் போகிற துருப்புச்சீட்டு. இவ்வளவு நாட்களாக இல்லத்தரசியாக வீட்டை பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி வந்த நீங்கள், இனி கலைஞர் உரிமைத்திட்டத்தின் பயனாளி என்று கம்பீரமாக சொல்லுகிற நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை பின்பற்றி, மற்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நேற்று முன்தினம் (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பாளிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாணிமைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கபடாதவர்கள், மீண்டும் மேல்முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம். தகுதியுள்ள ஒரு மகளிர் கூட இந்த திட்டத்தில் இருந்து விடுபட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறோம்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய தமிழக அரசு செயல்வடிவம் கொடுத்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதை செய்தார்கள். கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றம் கலாச்சாரம், சட்டம், பொருளாதாரம் ஆகிய மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்றும் தந்தை பெரியார் அவர்கள் கூறினார்.

பணக்காரன் ஏழை அடிமைத்தனத்தை விட, மேல்ஜாதி கீழ்ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி தொழிலாளி அடிமைத்தனத்தை விட மோசமானது இந்த ஆண் பெண் அடிமைத்தனம் என்று சொன்னார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படி தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இந்த பெண்கள் முன்னேற்றத்துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகளை எதிர்த்து பெண்ணுரிமைக்காக, அரசு செயல்படுத்தும் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களாக உள்ளன.

### பெண்களுக்கு முக்கியத்துவம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தான், பெண்களுக்கு தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமை கிடைத்திருக்கிறது. ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காக தனது அப்பாவையும், வளர்ந்து திருமணம் ஆனதும் கணவனையும், வயது முதிர்ந்த காலத்தில் தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் அமர வேண்டும்.

எனவே தான், அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுமார் 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிகமுக்கியமானது. சுமார் 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடிய திட்டம் அது. காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு காலை உணவு செய்து தருவதில் உள்ள சிரமத்தை இந்த திட்டம் போக்கியிருக்கிறது.

இதுவரை அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம். இந்த திட்டம் மகளிருக்கான உதவித்தொகை அல்ல, உரிமைத்தொகையாகும். இதன் மூலம் பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக சகோதரனாக இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும்.

பெண்கள் தங்கள் கைப்பேசியில் வருகிற செய்திகள் உண்மையா பொய்யா என்று நீங்கள் ஆராய்ந்து அதனை மற்றவர்களுக்கு பகிர வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ஒன்றியக்குழு தலைவர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர்.

பெண்கள் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சிகளில், அமைச்சர்கள் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ., சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அரசு செயலர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் நேற்று (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாணடியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் 1051 குடும்பத்தலைவிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பிலான கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்ட பற்றட்டைகளை வழங்கினர்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட நூலக அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் (26.10.2023) நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ரூ.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட போட்டித்தேர்வு பயில்வோர் பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அரசு செயலாளர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசபெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதிமற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்தனர்.



விருதுநகர் மாவட்ட விளையாட்டரங்க மைதானத்தில் நேற்று முன்தினம் (26.10.2023) உடற்பயிற்சி கூடம், உள்விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் நேற்று முன்தினம் (26.10.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், நடைபெற்ற பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தந்த போது, விருதுநகர் மாவட்டத்தின் சிறப்பம்சங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பார்வையிட்டனர்.



28.10.2023
கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து கழக இளைஞர் அணி செயல்வீரர் கூட்டம், மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், கலைஞர் நூலகம் திறப்புவிழா மற்றும் பல நிகழ்ச்சிகளை சிறப்பிக்கும்.
கழக இளைஞர் அணி செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
எங்கள் இளந்தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
ரெ.மகேஷ் B.A.,BL.,
நாகர்கோவில் மாநகராட்சி மேயர், குமரி (கி) மாவட்ட செயலாளர்
கன்னியாகுமரி (கி) மாவட்ட தி.மு.க

## ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’!

# தகுதியுள்ளவர்கள் விடுபட்டுவிடக் கூடாதென்பதே அரசின் நோக்கமாகும்!

## சாத்தூரில் மேல்முறையீட்டு விண்ணப்பங்களை நேரில் ஆய்வு செய்த பின் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சாத்தூர், அக்.28–**

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (26.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சமூகத்தில் சுயமரி யாதையோடு வாழ்வதற்காக வழிவகை செய்யும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமை தொகையில் வழங்க உத்தரவிட்டு, மாதந்தோறும் ரூ.1000/ வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற தமிழ்நாடு முழுவதும், 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதற் கட்டமாகவும், 05.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாம் கட்டமாகவும் முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தொடர்ந்து, விடுபட்டவர்களும், விண்ணப்பிக்க தவறியவர்களும் விண்ணப்பிக்க 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தொடர்பு தளங்களில் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஒப்பிட்டு, சரிபார்க்கப்பட்டு, அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகள் மூலம் சரிபார்க்கப்பட்டு, தகுதி வாய்ந்த சுமார் 1.65 கோடி மகளிர்களுக்கு ஒரு நாட்கள் முன்னதாகவே வரவு வைக்கப்பட்டது.



கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், விண்ணப்பம் ஏற்கப்படாதவர்கள், மேல்முறையீட்டு மனுக்களை அளிப்பதற்கான காலம் நேற்று முன்தினத்துடன் முடிவுற்றது. தமிழ்நாடு முழுவதுமிருந்து 11 லட்சம் மேல்முறையீட்டு மனுக்கள் பெறப்பட்டன. அவற்றை சார் ஆட்சியர் துணை ஆட்சியர் வருவாய் கோட்ட அலுவலர்கள் பரிசீலித்து வருகின்றனர். இந்நிலையில், விருதுநகர் மாவட்டம் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார். அப்போது மேல்முறையீடு செய்திருந்த மகளிரில் மூவரிடம் கைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார். அப்போது, அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை எடுத்துக் கூறிய போது, அதன் நியாயத்தை உணர்ந்து, அவர்கள் ஏற்றுக் கொண்டனர். கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விதிகளை பூர்த்தி செய்கிற ஒரு மகளிர் கூட, விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் பணியாற்றிட அரசு அலுவலர்களை கேட்டுக் கொண்டார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மற்றும் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

**கைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தி!**

அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் தகுதி இல்லாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பங்களின் நிலை குறித்த குறுஞ்செய்தியும் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் மூலமாக மேல்முறையீடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டது. மேல்முறையீட்டு கால அளவானது 24.10.2023 அன்றுடன் நிறைவடைந்தது. மேலும் இதுவரை பெறப்பட்டுள்ள மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் மீது நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் நடவடிக்கை எடுத்திட தொடர்புடைய மேல்முறையீட்டு அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. மாநில அளவில் இது வரை சுமார் 11.85 இலட்சம் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலர்களால் பரிசளிக்கப்பட்டு வருகின்றது. இந்த மேல்முறையீட்டு மனுக்கள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**தொடர் ஆய்வு!**

ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களில் கள ஆய்விற்காகப் பரிந்துரைக்கப்பட்ட 7.71 இலட்சம் மனுக்களின் மீது கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் தகுதியான பயனாளிகளுக்கு விடுபாடுகள் ஏதும் இன்றி உரிமைத்தொகையானது சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான பணிகளை வேகப்படுத்த அறிவுரை வழங்கப்பட்டு, இவற்றை தொடர்ந்து முதலமைச்சர் கண்காணித்து வருகிறார். தகுதியுள்ள எந்த ஒரு குடும்பத்தலைவியும் இத்திட்டத்தில் விடுபட்டு விடக் கூடாது என்பதே அரசின் நோக்கமாகும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக, மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் பணிகளை ஆய்வு செய்து, மேல்முறையீடு செய்திருந்த மகளிரில் மூவரிடம் கைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் கூறினார். அதன் நியாயத்தை உணர்ந்து, விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை ஏற்றுக் கொண்டனர்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விதிகளை பூர்த்தி செய்கிற ஒரு மகளிர் கூட, விடுபட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் பணியாற்றிட அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

---

### தஞ்சை மாவட்டம், பம்பைப்படையூர்

## மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மையம் சார்பில் சதய விழா!

*தஞ்சாவூர், அக்.28-*

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், பம்பைப்படையூர் மாமன்னர் இராசராச சோழன் வரலாற்று ஆய்வு மையம் சார்பில் மாமன்னர் இராசராசசோழன் “சதய விழா” 25.10.2023 புதன்கிழமை அன்று பம்பப்படையூர் சமத்துவபுரம் அண்ணா அரங்கில் நடைபெற்றது.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாண சுந்தரம், மு.சண்முகம், செ.இராமலிங்கம், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி. செழியன், குடந்தை சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், கும்பகோணம் துணை மேயர். சு.ப. தமிழழகன், தஞ்சை மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் சு.க.முத்துச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக மாமன்னர் இராசராசசோழன் வரலாற்று ஆய்வு மைய செயலாளர் சு.க.ஸ்ரீதரன் வரவேற்புரையாற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் .தியாகராஜன், திரைப்பட நடிகர் பசுபதி ஆகியோர் கும்பகோணம் கவின் கல்லூரி மாணவர்களின் சோழர்களின் வரலாற்று ஓவிய கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

“பழையாறை, உடையாளூர். சோழன்மாளிகை, தாராசுரம் ஆகியவை சோழப் பேரரசின் அழியாத அடையாளங்களை சுமந்து கொண்டிருக்கும் சரித்திர பிரசித்தி பெற்ற ஊர்கள், பழையாறை, சோழர் குலத்தின் புகழ் வரலாற்றில் நிலைத்து நிற்கும் வகையில் சாதனைகள் புரிந்த ராசராசசோழன் பிறந்து, வளர்ந்து, முடிசூட்டி. பின்னர் மறைந்தது என எல்லா பெருமைகளையும் தனதாக்கிக் கொண்ட ஊராகும்.

இவருடைய பேரரசியார் பஞ்சவன்மாதேவி, உடன்பிறந்த குலக்கொடி குந்தவை நாச்சியார் ஆகியோரின் பள்ளிப்படை கோயில்களும் இங்குதான் உள்ளன. தமிழனின் நீண்ட நெடிய வரலாற்றில் சேர, சோழ, பாண்டிய பேரரசுகளின் காலம் குறிப்பிடத்தக்கவை.

தொன்மையான நாகரீகம் கொண்ட மூத்த குடிமக்கள் “தமிழர்கள்” என்பதற்கு இங்கு கொட்டிக் கிடக்கும் சான்றுகள் ஏராளம். புதைந்து போனவை, மறைந்து போனவை, அருமை தெரியாமல் தொலைந்து போனவை என்பதெல்லாம் போக இன்னும் ஏராளம் தமிழகம் முழுவதும் உள்ளன. குறிப்பாக கல்லே இல்லாத ஊரில் கற்களைக் கொண்டே உலகின் தொன்மை சின்னங்களில் ஒன்றாகிய “தஞ்சாவூர் பெரிய கோயிலை” கட்டிய அருள்மொழிவர்மன் தேவர் ஆட்சி செய்த இப்பகுதிகளில் தமிழக தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டு வெளிக்கொணர வேண்டிய சரித்திர மிச்சங்கள் ஏராளமாக உள்ளன.

ஒன்றிய அரசை வலியுறுத்தி இப்பகுதியில் தீவிர ஆராய்ச்சி முயற்சிகளை மேற்கொண்டால் கீழடியில் கண்ட தமிழனின் தொன்மை வாழ்வில் மேன்மைகளைப் போல் ஏராளமான உண்மைகள் வெளிவர வாய்ப்புண்டு. இன்றைய தலைமுறை வரலாறு அறிய வேண்டியது அவசியமாகிறது. அறிந்தால்தான் பெருமை மிக்க நம்முடைய தமிழர் வாழ்வும், மாட்சிமையும் புழுதி படிந்த ஓவியமாய் கிடந்திடும் நிலைமை மாறும். திட்டமிட்டு புகழ் மறைக்க துடிப்போரிடமிருந்து நம்பாரம்பரிய அடையாளங்களை பாதுகாத்தால்தான் மூத்த மனித இனம், தமிழ் இனம் என்ற உண்மையை பாரறிய பறை சாற்ற முடியும்”. என்பதே இக்கருத்தரங்க நோக்கம்.

விழாவில் மாமன்னர் இராசராசசோழனின் வரலாற்றுச் செய்திகள் தொடர்புடைய தலைப்புகளில் அரசின் முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர் டி.எஸ். ஸ்ரீதர், வரலாற்று ஆய்வாளர், குடவாயில் சு.பாலசுப்ரமணியன், சிட்டி யூனியன் வங்கி நல அமைப்பு எஸ்.பாலசுப்ரமணியன், அழகப்பா பல்கலைக்கழகம், மேனாள் துணை வேந்தர் முனைவர். சொ.சுப்பையா, திரைப்பட நடிகர் பசுபதி. திருவையாறு அரசு கலைக்கல்லூரி முன்னாள் முதல்வர், முனைவர்.சு.தங்கமுத்து, கல்லூரி கல்வி இயக்கம் தஞ்சை மண்டலம் இணை இயக்குனர் முனைவர். ந.தனராஜன், அரசு கவின் கலைக்கல்லூரி பேராசிரியர் அரசு கவின் கலைக்கல்லூரி கோ.வில்வநாதன், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம் தலைவர் மற்றும் இணை பேராசிரியர் முனைவர் ஆ.துளசேந்திரன், தொல்லியல்துறை (ஓய்வு). கி.ஸ்ரீதரன், தஞ்சை குந்தவை நாச்சியார் மகளிர் கல்லூரி முனைவர். இரா.தமிழடியா, தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம் தமிழ் பண்டிதர், மணி, மாறன், சோழமண்டல வரலாற்று தேடல் குழு தலைவர் மரு.சா.உதயசங்கர், அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் முஹம்மது ஃபைசல், கோவை தமிழாய்வு அறக்கட்டளை அறங்காவலர் சு.சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.






கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர்
கலைஞர்
நூற்றாண்டு விழா
காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்
அக்டோபர்,
நவம்பர் மாத
கொண்டாட்டம்
அக்டோபர்
நாள் | நிகழ்ச்சி | இடம்
28.10.2023 | கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை நடத்தும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான திறனறிதல் ஒப்புவித்தல் போட்டி | கலைஞர் பவளவிழா மாளிகை, காஞ்சிபுரம்
30.10.2023 | ஊர்கள்தோறும் தி.மு.க. – கழக கொடியேற்றுதல் | அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியம்
31.10.2023 | ஊர்கள்தோறும் தி.மு.க. – கழக கொடியேற்றுதல் | அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியம்
நவம்பர்
20.11.2023 | இளைஞர் எழுச்சிநாள் பொதுக்கூட்டம் | உத்திரமேரூர்
22.11.2023 | இளைஞர் எழுச்சிநாள் பொதுக்கூட்டம் | காஞ்சிபுரம்
28.11.2023 | ஊர்கள்தோறும் தி.மு.க. – கழக கொடியேற்றுதல் | மதுராந்தகம் வடக்கு ஒன்றியம்
29.11.2023 | ஊர்கள்தோறும் தி.மு.க. – கழக கொடியேற்றுதல் | மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்
க. சுந்தர் B.Sc.,MLA.,
மாவட்ட கழக செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.




28.10.2023
குமரிக்கு
வருகை தரும்
இளைய
தலைவரே!
வருக... வாழ்க!! வெல்க!!!
அன்புடன் வரவேற்கும்... எஸ்.ஆஸ்டின் Ex.MP., Ex.MLA.,
கழக துணை அமைப்பு செயலாளர்

# நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் அவர்களின் அறிக்கை

**கழகத்தலைவர், மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க நாகை மாவட்டத்தில் உள்ள 163 – நாகப்பட்டினம், 164 – கீழ்வேளூர், 165 – வேதாரண்யம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) அவர்களை கண்காணிப்பதற்காகவும், அவர்களை நேரில் சென்று சந்திப்பதற்காகவும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள்



| | |
|---|---|
| 163 – நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் | திரு.**வி.ஜெயபிரகாஷ்** அவர்கள்<br>மாநில மீனவரணி துணை செயலாளர் |
| 164 – கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் | திரு.**கே.ஆர்.என்.போஸ்** அவர்கள்<br>மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் |
| 165 – வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் | திரு.**ஜெக.வீரபாண்டியன்** அவர்கள்<br>மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் |

ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி ஒன்றிய, நகர, பேரூர் கழகத்திற்கு கண்காணிப்பாளராக நியமிக்கப்படுகின்றனர்.

## 163 - நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதி

| வ.எண் | ஊராட்சி / வார்டு எண்ணிக்கை | பாகம் எண்ணிக்கை | ஒன்றியம் / நகரம் / பேரூர் | கண்காணிப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 17 | 49 | திருமருகல் வடக்கு ஒன்றியம் | தலைமை : **செல்வ.செங்குட்டுவன்,** திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**ஆரூர்.மணிவண்ணன்,** மாவட்ட கழக துணைச் செயலாளர்<br>**பெ.முருகானந்தம்,** மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத்தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 2 | 22 | 35 | திருமருகல் தெற்கு ஒன்றியம் | தலைமை : **ஆர்.டி.எஸ்.சரவணன்,** திருமருகல் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**மு.லோகநாதன்,** மாவட்ட கழக பொருளாளர்<br>**எஸ்.கே.ஜி.ஏ.சேகர்,** மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 3 | 15 | 9 | திட்டச்சேரி பேரூர் | தலைமை : **எம்.முகம்மது சுல்தான்,** திட்டச்சேரி பேரூர் கழக செயலாளர்<br>**கே.எஸ்.சாகுல் ஹமீது ராஜா**<br>மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள்<br>**ஜெ.ஆர்.கே.சுரேஷ்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 4 | 10 | 24 | நாகூர் நகரம் | தலைமை : **எம்.ஆர்.செந்தில்குமார்,** நாகூர் நகர கழக செயலாளர்<br>**தி.கலையரசன்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**எம்.தினேஷ்குமார்,** மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 5 | 13 | 39 | நாகை வடக்கு ஒன்றியம் | தலைமை : **என்.ஆனந்த்,** நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**எஸ்.பன்னீர்செல்வம்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**இரா.முருகையன்,** மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 6 | 13 | 33 | நாகை நகரம் | தலைமை : **இரா.மாரிமுத்து,** நாகை நகர கழக செயலாளர்<br>**பி.என்.கார்த்திக்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**எஸ்.சந்தோஷ் (எ) மணிகண்டபூபதி**<br>மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| | 13 | 32 | | தலைமை : **இரா.மாரிமுத்து,** நாகை நகர கழக செயலாளர்<br>**கே.பாண்டியன்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**இளம் சுந்தர்,** மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள்<br>**த.தமயந்தி,** மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |

## 164 - கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி

| வ.எண் | ஊராட்சி / வார்டு எண்ணிக்கை | பாகம் எண்ணிக்கை | ஒன்றியம் / நகரம் / பேரூர் | கண்காணிப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 7 | 19 | 32 | கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் | தலைமை : **ப.கோவிந்தராசன்,** தலைமை செயற்குழு உறுப்பினர், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**கோ.சிவக்குமார்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**எஸ்.பால்ராஜ்,** மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத்தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 8 | 19 | 31 | கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் | தலைமை : **கா.பழனியப்பன்,** கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**ஆர்.ஏ.டி.அண்ணாதுரை**<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள்<br>**கு.பன்னீர்செல்வம்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 9 | 15 | 7 | கீழ்வேளூர் பேரூர் | தலைமை : **கா.அட்சயலிங்கம்,** கீழ்வேளூர் பேரூர் கழக செயலாளர்<br>**ஆர்.சுரேந்தர்,** மாவட்ட அயலக அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள்<br>**எஸ்.டேனியல் சத்யா,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 10 | 16 | 38 | நாகை தெற்கு ஒன்றியம் | தலைமை : **க.இராசேந்திரன்,** தலைமை செயற்குழு உறுப்பினர், நாகை தெற்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**இல.பழனியப்பன்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**வீ.செந்தில்,** மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 11 | 19 | 55 | கீழையூர் கிழக்கு ஒன்றியம் | தலைமை : **ஏ.தாமஸ் ஆல்வா எடிசன்,** கீழையூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**இல.மேகநாதன்,** தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**ப.உதயக்குமார்,** மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் |
| 12 | 19 | 55 | கீழையூர் மேற்கு ஒன்றியம் | தலைமை : **சோ.பா.மலர்வண்ணன்,** கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**எஸ்.பி.சார்லஸ்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**ஆர்.ஆர்.குலோத்துங்கன்,** மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 13 | 14 | 31 | வேளாங்கண்ணி பேரூர் | தலைமை : **சே.மரியசார்லஸ்,** வேளாங்கண்ணி பேரூர் கழக செயலாளர்<br>**ஜி.தாமோதரன்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**வ.கமல்,** மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் |

## 165 - வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி

| வ.எண் | ஊராட்சி / வார்டு எண்ணிக்கை | பாகம் எண்ணிக்கை | ஒன்றியம் / நகரம் / பேரூர் | கண்காணிப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 14 | 18 | 42 | தலைஞாயிறு ஒன்றியம் | தலைமை : **மகா.குமார்,** தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர்<br>**கற்பகம் நீலமேகம்,** மாவட்ட கழக துணைச் செயலாளர்<br>**அ.பாரிபாலன்,** மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர்கள் |
| 15 | 15 | 13 | தலைஞாயிறு பேரூர் | தலைமை : **சி.சுப்பிரமணியன்,** தலைஞாயிறு பேரூர் கழக செயலாளர்<br>**எல்.எஸ்.இ.பழனியப்பன்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**எஸ்.வி.டி.அருள்,** மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 16 | 21 | 33 | வேதாரண்யம் நகரம் | தலைமை : **மா.மீ.புகழேந்தி,** வேதாரண்யம் நகர கழக செயலாளர்<br>**கோ.ரவிச்சந்திரன்,** மாவட்ட கழக துணைச் செயலாளர்<br>**டி.எஸ்.அசோக்,** மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்<br>**எஸ்.புவனேஸ்வரி,** மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 17 | 18 | 74 | வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் | தலைமை : **என்.சதாசிவம்,** வேதாரண்யம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**சீ.க.மறைமலை,** தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**ஆர்.துரைராசு,** மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |
| 18 | 18 | 65 | வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் | தலைமை : **உதயம்.வே.முருகையன்,** வேதாரண்யம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்<br>**உமா செந்தாமரைசெல்வன்,** பொதுக்குழு உறுப்பினர்<br>**க.சத்தியமூர்த்தி,** மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மற்றும் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் |

குறிப்பு : ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாவட்ட கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பாளர்களை கொண்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் BLA2 மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் BLC, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கிளை – வார்டு கழக நிர்வாகிகள் அனைவரையும் ஒருங்கிணைத்து கூட்டங்கள் நடத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**என்.கௌதமன்**
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாமன்னர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மருது சகோதரர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆலங்குளத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.




இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய மாமன்னர் மருதுபாண்டியர்களின் நினைவு நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் உள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலைக்கு இராமநாதபுர மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், விவசாய அணி மாநிலத் துணைச் செயலாளர் நல்ல சேதுபதி, முன்னாள் செயற்குழு உறுப்பினர் குணசேகரன், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மண்டபம் ஒன்றிய செயலாளர் கே ஜே பிரவீன், போகலூர் ஒன்றிய செயலாளர் குணசேகரன் மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பள்ளிப் பாடப் புத்தகங்களில்

# இந்தியாவின் பெயரை ‘பாரத்’ என மாற்ற பரிந்துரை செய்வதா?

## ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கண்டனம்!



சென்னை, அக்.28-

“பள்ளிப் பாடப் புத்தகங்களில் இந்தியாவின் பெயரை ‘பாரத்’ என மாற்ற பரிந்துரை செய்வதா?” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கல்வி ஆராய்ச்சி புதிய கவுன்சிலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பள்ளிப் பாடப் புத்தகங்களில் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.)உருவாக்கிய உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து இக்குழுவின் தலைவரும், வரலாற்று ஆராய்ச்சி இந்திய கவுன்சில் உறுப்பினருமான ஐசக் ,“பள்ளிப் பாடத்திட்டத்தை மாற்றியமைப்பதற்காக உருவாக்கப்பட்ட என்சிஇஆர்டி, சமூக அறிவியல் பாடத்துக்கான உயர் நிலைக் குழுவை அமைத்தது.

என்சிஇஆர்டி புதிய பாடப் புத்தகங்களில் மாற்றங்களை செய்ய 7 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒருமனதாக பரிந்துரை செய்துள்ளது.

அரசியல் சாசனத்தின் 1 (1) ஆவது பிரிவில் இந்தியாவின் பெயர் ஏற்கெனவே பாரத் என்று உள்ளது. பாரத் என்பது பழங்கால பெயர். 7,000 ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணம் போன்ற பழங்கால புத்தகங்களில் பாரத் என்ற பெயர் குறிப்பு உள்ளது.

கிழக்கு இந்திய கம்பெனி வந்த பின்பும், 1757ம் ஆண்டு பிளாஸி போருக்குப் பின்புதான் இந்தியா என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது. அதனால், அனைத்து வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களில் இந்தியா என்ற பெயருக்கு பதில் பாரத் என்ற பெயரை பயன்படுத்த வேண்டும் என உயர்நிலைக் குழு ஒருமனதாக பரிந்துரை செய்துள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1ல், “இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிய பாஜக அரசு ‘பாரத்’ என்பதை மட்டுமே அதிகாரபூர்வ பெயராக மாற்ற முடிவு செய்தால், அவர்கள் அரசியலமைப்பின் 1ஆவது பிரிவைத் திருத்துவதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த வேண்டும்.

குறிப்பாக 368ஆவது பிரிவு, அரசியலமைப்பு சட்டத்தை ஒரு சாதாரண பெரும்பான்மை திருத்தம் (Simple Majority Changes) அல்லது சிறப்பு பெரும்பான்மை திருத்தம் (Special Majority Changes) மூலம் திருத்த அனுமதிக்கிறது.

அரசியலமைப்பின் பிரிவு 1இல் மாற்றம் கொண்டுவருவது உட்பட அரசியலமைப்பின் மிகமுக்கிய மாற்றங்களுக்கு, அவையில் இருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் சிறப்புப் பெரும்பான்மை (66 விழுக்காடு) தேவை என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே, இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்ற வேண்டும் என்றால், அவையில் 66 விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இரு அவைகளிலுமே பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து வரும் ஒன்றிய பாஜக அரசு, நாடாளுமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வராமலேயே இந்தியாவின் பெயரை பாரத் என்று நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றின் பெயர்களை

மாற்றி திருத்த புதிய சட்ட முன்வரைவு ஒன்றை நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்துள்ளார்.

அதன்படி இந்திய தண்டனைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதீய நியாய சன்ஹிதா, குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, இந்திய சாட்சியச் சட்டத்திற்குப் பதிலாக பாரதீய சாக்ஷ்யா என அழைக்கப்படும் என்று இந்த சட்ட திருத்த முன்வரைவில் கூறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தற்போது என்.சி.இ.ஆர்.டி., பள்ளிப் பாட புத்தகங்களில் இந்தியாவின் பெயரை பாரத் என்று மாற்றுவதற்கு முயற்சிப்பது அதன் அதிகார வரம்பை மீறியது மட்டுமல்ல, சட்ட நெறிமுறைகளையும் மீறிய செயலாகும். கடும் கண்டனத்திற்குரிய இந்தப் பரிந்துரையை ஏற்கக் கூடாது.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு 20 சதவிகித போனஸ் அறிவித்த

# தமிழ்நாடு முதல்வருக்கு தொழிலாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றி!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, அக். 28-

“மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு 20 சதவிகித போனஸ் அறிவித்த தமிழ்நாட்டு முதல்வருக்கு தொழிலாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றி!” என தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் சீர்கெட்டுப் போய் கிடந்தது. இந்தச் சூழலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நாள் முதலாக கடும் நிதி நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய இடர்பாடுகளை களைய படிப்படியாக பல்வேறு சலுகைகளை மீண்டும் கொடுத்து வருகிறார்கள். நிதி நிலை மோசமாக இருந்தாலும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும் எண்ணம் கொண்டு தொடர்ந்து தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்து வரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொ.மு.ச. பேரவையின் சார்பில் நன்றியும் நெஞ்சார வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு பொதுத்துறை நிறு வனங்கள் மிகவும் மோசமான நிதி நெருக்கடி யை சந்தித்திருந்த போதிலும் ஒன்றிய அரசின் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் ஊதியம் வழங்க முடியாத சூழ்நிலையில் இருந்த போதிலும் தமிழ்நாட்டில் தளபதி அவர்களுடைய அறிவுத் திறன்மிக்க ஆட்சியில் பொதுத்துறை ஊழியர்கள் கோரிக்கைகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கொரோனா பெருந்தொற்று காலத்தில் போனஸ் வழங்குவதில் குறைபாடுகள் இருந்தாலும் இந்த ஆண்டு அதை அத்தனையையும் நீக்கி மனநிறைவு ஏற்படும் வகையில் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களுக்கும் 20 சதவிகிதம் போனஸ் அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொ.மு.ச. பேரவையின் இணைப்புச் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல் சில விடுபட்ட துறைகள் இருந்தால் அவற்றுக்கும் விரைவில் அறிவிப்பு வரும் என்ற உறுதியை அளித்துள்ள தலைவருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

20 சதவிகித போனஸை பெற்றிருப்பதற்கு உதவிகரமாக இருந்த அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களையும் பேரவையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அகவிலைப்படி உயர்வு

# முதலமைச்சருக்கு ஓய்வூதியர் சங்கம் நன்றி!

## கோ.சீதாராமன் அறிக்கை!

சென்னை, அக். 28-

ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு 4 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் மாநிலத் தலைவர் கோ.சீதாராமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசு, அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியினை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசும் அதனைப் பின்பற்றி அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வினை செயல்படுத்தப்படும் என்று ஏற்கெனவே வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை, 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட, தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதை தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் நன்றியுணர்வுடன் எண்ணிப்பார்த்து, 7 லட்சம் ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் சார்பில் தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதுடன், தமிழக அரசின் அனைத்து மக்கள் நலத் திட்டங்களுக்கும் எப்போதும் போல் முழுமையான ஒத்துழைப்பினை நல்குவோம் என மாநிலத் தலைவர் கோ. சீதாராமன் தெரிவித்துள்ளார்.

### 6,52,065 வாக்காளர்கள் உள்ளனர்

# தமிழ்நாட்டின் பெரிய தொகுதி சோழிங்கநல்லூர்!

## மாநில தலைமை தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, அக். 28-

தமிழ்நாட்டின் பெரிய தொகுதியாக சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளதாகவும், அங்கு மொத்தம் 6 லட்சத்து 52 ஆயிரத்து 65 வாக்காளர்கள் இருப்பதாகவும் மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தலைமை தேர்தல் அதிகாரியின் அறிவிப்பு வருமாறு:-

01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2. 27.10.2023 அன்று அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் பள்ளிக் கட்டடங்களில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகள்) ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப் பட்டுள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல்கள் https://www.elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், வாக்காளர் பட்டியலின் இரண்டு நகல்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்படும்.

3. புகைப்படத்துடன் கூடிய ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2024ன் வரைவு வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 6,11,31,197 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள்: 3,00,68,610, பெண்கள்: 3,10,54,571, மூன்றாம் பாலினத்தவர்: 8,016)

4. மாநிலத்திலேயே உயரளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 6,52,065 வாக்காளர்களுடன், செங்கல்பட்டு மாவட்டத்தின் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது (ஆண்கள்: 3,26,676, பெண்கள்: 3,25,279, மூன்றாம் பாலினத்தவர்: 110)

5. மாநிலத்திலேயே குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 1,69,030 வாக்காளர்களுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் கீழ்வேளூர் தொகுதி உள்ளது. (ஆண்கள்: 83,436, பெண்கள்: 85,591, மூன்றாம் பாலினத்தவர்: 3)

6.04.11.2023, 05.11.2023, 18.11.2023 மற்றும் 19.11.2023 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பொதுவாக, வாக்குச் சாவடிகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/ நீக்கல்/ திருத்தல்/ இடமாற்றம்/ ஆதார் எண்ணை இணைத்தல் ஆகியவற்றுக்கான படிவங்கள் அந்தந்த நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் கிடைக்கும். பூர்த்தி செய்த படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம்.

7. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2024ன் போது கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் அளிக்க அனுமதிக்கப்பட்ட 27.10.2023 முதல் 09.12.2023 வரை உள்ள காலத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் / திருத்தங்கள்/ இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் அல்லது தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கீழ்க் கண்டவாறு அளிக்கலாம்:

(1) அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் / வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

(2) சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச் சாவடி அமைவிடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.

(3) அலுவலக வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் அளிக்கலாம்.

8. பெயர் சேர்த்தலுக்கான விண்ணபத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். முகவரிச் சான்றாக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்:

i.முகவரிக்கான நீர்/ மின்சாரம்/ எரிவாயு இணைப்பு ரசீது (குறைந்தது 1 வருடத்திற்காவது)

ii.ஆதார் அட்டை

iii.தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி/ அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம்

iv.கடவுச் சீட்டு

v.விவசாயி புத்தகம் உட்பட வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள்

vi.பதிவுசெய்யப்பட்ட வாடகை குத்தகை பத்திரம் (குத்தகைதாரராக இருந்தால்)

vii.பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம் (சொந்த வீடு எனில்)

வயதுச் சான்றாக சுய சான்றொப்பமிட்ட கீழ்க் காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்:

i.தகுதிவாய்ந்த உள்ளாட்சி அமைப்பு/ நகராட்சி அதிகாரி/ பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் வழங்கிய பிறப்பு சான்றிதழ்

ii. ஆதார் அட்டை

iii. பான் அட்டை

iv. ஓட்டுநர் உரிமம்

v. சிபிஎஸ்இ/ ஐசிஎஸ்இ/ மாநில கல்வி வாரியங்களால் வழங்கப்பட்ட பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு சான்றிதழ்கள், அதில் பிறந்த தேதி இருந்தால்

vi. இந்திய கடவுச் சீட்டு

25 வயதுக்குக் கீழுள்ள மனுதாரர்கள் வயதுச்சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். https://voters.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் “வாக்காளர் உதவி” கைபேசி செயலி (VOTER HELP LINE Mobile App) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

9. 01.01.2024, 01.04.2024, 01.07.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்ப தாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப் படங்களை அளிக்க / தரவேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படவேண்டும் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிக்கு தபாலிலும் படிவத்தை அனுப்பலாம். வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படும் போது அதனுடன் கூட விண்ணப்பதாரரின் புகைப்படம், ஏனைய பிற விவரங்களுடன் நுழைவிசையின் (Visa) செயல்திறன் பற்றிய மேற்குறிப்பு அடங்கிய கடவுசீட்டின் தொடர்புடைய பக்கங்களின் ஒளிநகலையும் சேர்த்து அளிக்கவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி மூல கடவுசீட்டினை ஒப்பிட்டுச் சரிபார்த்து உடனடியாக திரும்பக் கொடுத்துவிடுவார். படிவம் 6A தபாலில் அனுப்பப்படும்போது, கடவுசீட்டின் ஒளிநகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

11. ஒரு வாக்காளர் தனது வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கு படிவம் 6பிஇல் விண்ணப்பிக்கலாம். 26.10.2023 அன்று வரை, தமிழகத்தில் 4.23 கோடி (69.21%) ஆதார் எண்கள் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைப்பதற்காக சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், தான் வசிக்கும் இருப்பிடத்தை ஒரு தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாற்றினாலோ அல்லது தற்போது வசிக்கும் தொகுதிக்குள்ளேயே இடம் பெயர்ந்தாலோ அல்லது வாக்காளரின் விவரங்களில் திருத்தம் செய்ய வேண்டியிருந்தாலோ அல்லது இடம் பெயர்தல் / திருத்தம் / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்து போதல் ஆகிய காரணங்களுக்காக மாற்று புகைப்பட அடையாள அட்டை பெற வேண்டியிருந்தாலோ படிவம் 8ல் விண்ணப்பிக்க வேண்டும்.

**பல்வேறு வகையான படிவங்கள்:**

படிவம் 6 புதிய வாக்காளர்களுக்கான விண்ணப்பப் படிவம்

படிவம் 6 A வெளிநாடு வாழ் வாக்காளர் ஒருவர் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பம்

படிவம் 6B வாக்காளர் பட்டியல் அங்கீகாரத்திற்காக ஆதார் எண் உண்மையென சான்றுரைத்தல்

படிவம் 7 நபரின் பெயரை சேர்க்க ஆட்சேபணைக்கான வாக்காளர் விண்ணப்பப் படிவம்/ வாக்காளர் பட்டியலில் ஏற்கெனவே உள்ள பெயரை நீக்கக் கோருவதற்கான விண்ணப்பம் படிவம் 8 குடியிருப்பை ஒரு தொகுதியிலிருந்து வேறு தொகுதிக்கு மாற்றினாலோ அல்லது தற்போது வசிக்கும் தொகுதிகுள்ளேயே மாற்றினாலோ / நடப்பு வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளை திருத்தம் செய்வதற்கான/ மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கான/ மாற்றுத் திறனாளிகளை குறிப்பதற்கான விண்ணப்பப் படிவம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டெல்டா மாவட்டங்களில் அடங்கிய

# நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## நன்னியூர் ராஜேந்திரன் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழக நெசவாளர் அணியின் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் மையம், தஞ்சாவூர் மாநகரம், மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களின் நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் 30.10.2023 அன்று காலை 10.00 மணி அளவில் திருவாரூர் கலைஞர் கோட்டம் தயாளு அம்மையார் அரங்கத்தில் என்னுடைய தலைமையில் நெசவாளர் அணி துணைத்தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்பில் அணியின் மாநில செயலாளர்கள்.எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி.தி.அன்பழகன், பரணி.கே.மணி,.நெல்லை சொ.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்துரவிச்சந்திரன் மற்றும் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன்..கோவிந்தசாமி . ஆ.ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

உயர்கல்வித்துறை அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் க.பொன்முடி, கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருவாரூர் மாவட்டக்கழக செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை - சுதந்தர குமார், டி.ஆ.அனந்தராமன் மாவட்ட, மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நீட்டு விலக்கு - நமது இலக்கு கையெழுத்து இயக்கம், கழக ஆக்கப்பணிகள்

**நன்னியூர் ராஜேந்திரன்**
தலைவர், தி.மு.க. நெசவாளர் அணி



சேலம் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் நேற்று (27.10.2023) நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஊராட்சி ஒன்றியம், தெற்கு இலந்தைகுளம் ஊராட்சியிலுள்ள மானங்காத்தான் கிராமத்தில், 1996 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததை அறிந்த கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தனது முயற்சியால், NTT GLOBAL DATA CENTER AND CLOUD INFRASTRUCTURE INDIA PVT. LTD., CHENNAI நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூபாய் 80 இலட்சம் மதிப்பில், பழுதடைந்த 20 தொகுப்பு வீடுகளை இடித்து, புது வீடுகள் கட்டும் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து 24.10.2023 அன்று, கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற 9 வீடுகளை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, கருப்பசாமி, செல்வி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### ஜப்பான் நாட்டில் வழங்கப்பட்டது

# தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் திட்டத்திற்கு விருது!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெற்றுக்கொண்டார்!

ஒசாகா (ஜப்பான்), அக்.28-

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட விருதினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பெற்றுக்கொண்டார்.

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நேற்று முன்தினம் (26.10.2023) நடைபெற்ற 7-வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கிய செயற்குழுவின் விருதினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, தென் ஆப்பிரிக்கா, கனடா, சீனா, மலேசியா. ரஷ்யா, இலங்கை, ஜப்பான் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும். அவர்கள் தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை அதிகரிக்கவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சுற்றுலாத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டின் மனதை மயக்கும் நிலப்பரப்புகள், அழகிய அற்புதமான கலாச்சார பாரம்பரியம். கட்டடக் கலை, பிரமிப்பூட்டும் கடற்கரைகள், ஆர்ப்பரிக்கும் நீர்வீழ்ச்சிகள், பாரம்பரிய கலை வடிவங்கள். புகழ்பெற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் உணவு வகைகளை வீடியோக்கள் மூலம் உலகெங்கும் காட்சிப்படுத்துவதன் மூலம் தமிழகத்தை சிறந்த சுற்றுலாத் தலமாக இந்தியாவிலும், உலகெங்கிலும் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை அறிந்து கொள்ளும் வகையில் 75க்கும் மேற்பட்ட யூட்யூப் காணொலிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களையும், மாநிலம் முழுவதும் அனைத்து பகுதிகளிலும் இரயில் இணைப்புகளையும், மாநிலத்திலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் இணைக்கின்ற வகையிலான நன்கு மேம்படுத்தப்பட்ட சாலை கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது.

சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்துவதற்காக "தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக சுற்றுலாத்தலங்களுக்கு தொடர்ந்து வருகை தருபவர்களுக்கு புது அனுபவம் கிடைக்கும் வகையில் சாகச சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மாநிலத்தின் பல்வேறு சுற்றுலாத்தலங்களில் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய புதிய முயற்சிகளின் காரணமாக உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு ஆர்வத்துடன் வருகை தந்து தமிழ்நாட்டில் கூடுதல் நாட்கள் தங்கி பார்வையிட்டு வருகின்றார்கள்.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகமானது, மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்காவின் 21 தீவுகளை உள்ளடக்கியது. உள்ளூர் மக்களின் பங்களிப்பைப் பயன்படுத்தியும், இப்பகுதியின் ஏராளமான இயற்கை வளங்களைப் பயன்படுத்தியும் சுற்றுச்சூழல் சுற்றுலா தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுற்றுலா தலமும் சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், தீவுகள், டால்பின்கள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் அமைப்புகளில் கவனம் செலுத்துகிறது. சுற்றுலா பயணிகள் மற்றும் பார்வையாளர்கள் பல்வேறு சுற்றுச் சூழல்களை ஆராய்வதற்கும், பார்வையிட்டு மகிழ்வதற்கும் பல்வேறு வாய்ப்புகளை வழங்குவதே மன்னார் சூழல் சுற்றுலா திட்டத்தின் குறிக்கோளாகும். குருசடை தீவு சுற்றுச்சூழல் சுற்றுலா, காரங்காடு சதுப்புநில சுற்றுலா, தருவைகுளம் சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் ஏர்வாடி பவள சுற்றுச்சூழல் சுற்றுலா ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டம், சுற்றுப் பயணங்களை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் சமூகத்திற்கு அதன் பொருளாதார பங்களிப்பிற்காக மட்டுமல்லாமல், பிராந்தியத்தின் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் அதன் முயற்சிகளுக்காக வும் அங்கீகரிக்கப்பட்டது.

இத்தகைய உன்னத முயற்சிகளுக்காக ஜப்பான் நாட்டின் 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில் செயற்குழுவின் விருதிற்கு இத்திட்டம் தேர்வு செய்யப்பட்டது. ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7 வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்காக வழங்கிய செயற்குழுவின் விருதினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன் கலந்து கொண்டார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனையேரி ஊராட்சியில் புதிய தார்ச் சாலை, பேவர்பிளாக் சாலை அமைப்பதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் சிவ. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சரும் – மாவட்டச் செயலாளருமான சா.சி. சிவசங்கர் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றியக் கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா.செளந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகரக் கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயி கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம்.அன்பழகன் இரா.பாலு, பொய்யாமொழி,வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் வி.எஸ்.ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற உறுப்பினர் வரை.எஸ்.பிரகாஷ் , மாவட்ட ஆட்சி தலைவர் சாருஸ்ரீ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# அக்.31ல் தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம்!

சென்னை, அக். 28-

முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம், வரும் 31ம் தேதி தலைமைச் செயலகத்தில் நடக்க உள்ளது.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு, 2024 ஜனவரி 7, 8ல் நடக்க உள்ளது. இதற்காக, புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கு பல்வேறு அனுமதிகள் வழங்க வேண்டியுள்ளது.

வடகிழக்கு பருவமழைக் காலம் துவங்கியுள்ளதால், இரண்டு மாதங்களுக்கு தொடர் முன்னெச்சரிக்கை பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

கவர்னர் மாளிகைக்கு வெளியே பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இவை உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசிப்பதற்காக, முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம், 31ம் தேதி மாலை 6:30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் நடக்கிறது.

### மக்களவை, மாநில சட்டப் பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த

# 30 லட்சம் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் தேவை!

புதுடெல்லி, அக்.28-

ஒரே நேரத்தில் மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமானால் இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு சுமார் 30 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவை என்றும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகால அவகாசம் தேவை என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள 22-ஆவது சட்ட ஆணையம், கடந்த சில மாதங்களுக்குமுன் தேர்தல் ஆணையத்திடம் ஆலோசனை நடத்தியது. அப்போது, தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள், அதன்முன் உள்ள சவால்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய ஒரே தேர்தல் நடை முறைக்கு வரும் போது அமைக்கப்பட வேண்டிய வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கடந்த 2019 மக்களவைத் தேர்தலின் போது 12.50 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.

#### இயந்திரங்களுக்குப் பற்றாக்குறை

தேர்தலில் வாக்களிக்கப் பயன்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்தி ரம் என்பது, ஒரு கட்டுப் பாட்டு பிரிவு, வாக்களிக்கும் பிரிவு, வாக்காளர் ஒப்புகைச் சீட்டு இயந்தி ரம் (விவிபாட்) என 3 பிரிவுகளைக் கொண்டது. தேர்தல் ஆணையத் துக்கு 12.50 லட்சம் வாக்குச்சாவடிகளில் பயன்படுத்த 15 லட்சம் கட்டுப்பாட்டுப் பிரிவு, 18 லட்சம் வாக்களிக்கும் பிரிவு, 15 லட்சம் விவிபாட் தேவைப்படுகிறது.

ஒரே நேரத்தில் நடைபெறும் மக்களவை, மாநில சட்டப்பேரவைத் தேர்தலின் போது, இரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்களிக்க வேண்டும். இதற்காக சுமார் 30 லட்சம் கட்டுப்பாட்டுப் பிரிவும், 43 லட்சம் வாக்களிக்கும் பிரிவும், 32 லட்சம் விவிபாட் இயந்திரங்களும் தேவைப்படும். இவற்றில் 35 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பிரிவுகளுக்கு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

#### அதிகரிக்கும் செலவு

கடந்த முறை கொள்முதல் செய்யப்பட்ட ஒரு கோடி வாக்குப்ப திவு இயந்திரங்களின் 3 பிரிவுக்கும் ரூ.15,000 கோடி செலவானது. இதில் விவிபாட் இயந்திரத்துக்கு மட்டும் ரூ.6,500 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய 3 அடுக்கு அமைப்புக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர் நிலைக் குழு ஆராய்ந்து வருகிறது. இந்நிலையில், 3 அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது, வாக்குப்பதிவு இயந்திர கொள்முதல் செலவு மேலும் அதிகரிக்கும்.

தயாரிப்பு, சோதனை பணிகள்: 15 ஆண்டுகள் ஆயுள்காலம் கொண்ட இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைச் சேமித்து வைக்கப் போதிய எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த இயந்திரங்களை பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் (பிஇ எல்), இந்திய மின்னணுக் கழக நிறுவனம் (இசிஐஎல்) ஆகிய இரு பொதுத் துறை நிறுவனங்கள் தயாரித்து வருகின்றன.


அதிக எண்ணிக்கையிலான வாக்களிக்கும் இயந்திரங்களைத் தயாரிக்கவும் அவற்றை சோதனை செய்யவும் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் ஆகும் என தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

மேலும், தேர்தலுக்கு முன்பாக இந்த இயந்திரங்களை முதல் நிலை சோதனை செய்ய தேர்தல் ஆணையத்துக்கு அவகாசம் தேவை. இதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இரு வாக்குப்பதிவு இயந்திரங்களை சோதனை செய்ய மாதிரி தேர்தலும் நடத்தப்படும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வண்ணை கே.எஸ்.பாண்டியன்

### அக்டோபர் 28 (1952)



கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.

தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

"கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நாம் சென்று கொண்டிருப்போம்!" என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட "திராவிட நாடு" தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கடலூர் மேற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை!

கடலூர் அக். 28-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கடலூர் மேற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் உயர்நிலை மேல்நிலைப்பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு கலைஞரின் கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஆகியவை ஒப்பித்தல் போட்டி நாளை (29.10. 2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை வகித்து பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் வண்ணை அரங்கநாதன் நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்கள்.

கடலூர் மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ.மதனகுரு வரவேற்புரை ஆற்றுகிறார்.

மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் பக்கிரிசாமி ஆர். ராதா கிருஷ்ணன் ஏ. எம்.சங்கர் இ.எம். கொளஞ்சியப்பன் ஆர். அண்ணாதுரை ஜி. அப்துல்லா நடராஜன்

மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் டி.ஆர்.வி. ரமேஷ் எம்.பி., ஜி. தண்டபாணி வி.கே. வெங்கட்ராமன் ஆர்.எஸ்.எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன் பி.வி. பி.முத்துகுமார் பாவாடை கோவிந்தசாமி பா. திருமாவளவன், என். பாரி வீர. ராமச்சந்திரன் என்.பலராமன் அரங்க. பாலகிருஷ்ணன் பொ. புகழேந்தி ஐயப்பன் ஜெரால்டு செந்தமிழ்ச் செல்வி கருப்புசாமி கே. அறிவழகன்

நகர மன்ற தலைவர்கள் கே. ராஜேந்திரன் டாக்டர் சங்கவி முருகதாஸ் ஜெயந்தி ராதாகிருஷ்ணன் ஒன்றிய பெருந்தலைவர்கள் சபா. பாலமுருகன் கே.என்.டி. சுகுணாசங்கர் பேரூராட்சி தலைவர்கள் ஜெயமூர்த்தி வனஜாசுந்தர வடிவேல் ஒன்றிய நகர பேரூர் செயலாளர் ஏ. குணசேகரன் பட்டூர். அமிர்தலிங்கம் சிவ. தியாகராஜன் அடரி. சின்னசாமி தி. வேல்முருகன் கனக கோவிந்தசாமி கோட்டேரி சுரேஷ் ஆசைத்தம்பி ப. மணிவண்ணன் க.தண்டபாணி வி.பி.பி.பரமகுரு ஆர். சுந்தரவடிவேல் சி. செல்வம் எம். குமரவேல் மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் எம்.எஸ். கணேஷ்குமார் சி.வி.ஜி. வெங்கடேசன் டாக்டர். ராஜேஷ் என். கார்த்திகேயன் கதிர்காமன் எஸ். இராமு ஜி. எஸ். ஆனந்த் குமார் கோனூர் மதியழகன் எம். கே. அருள்குமார் தங்க. அன்பழகன் எம். கே.சேதுராமன் ஜி.சேகர் ஜெயந்தி நடராஜன் நல்லுசாமி செந்தில் ஏ.ஜே. எஸ்.பிரீன்ஸ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ராஜேஷ் டி. துரைராஜ் தங்க. நாராயணசாமி சதாம் பாரதிராஜா மற்றும் நெய்வேலி நகர நிர்வாகிகள் நன்மாற பாண்டியன் மதியழகன், ரவிச்சந்திரன், நாசர், இளங்கோவன், ராமகருப்பன் செந்தமிழ் செல்வன் கோமதி செந்தில்குமார் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் கா. பாலு நன்றி உரையாற்றுகிறார்.

### தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - ரா.சந்திரகலா, 51, ஒத்தவாடைத் தெரு, உருளையன்பேட்டை, புதுச்சேரி - 11. துணை

தலைவர் - வெ.பிரியதர்ஷினி, 5,2-ம் தெரு, காவேரி வீதி, அனிதா நகர், முதலியார் பேட்டை, புதுச்சேரி 605004.

அமைப்பாளர் - **ந.காயத்ரி,** 42 நடுத்தெரு, புதுப்பேட்டை, வாஸ்பேட்டை, புதுச்சேரி 605008

துணை அமைப்பாளர்கள் - ரமா, 64, மாரியம்மன் கோவில் வீதி, ஜி.என். பாளையம், வில்லியனூர், புதுச்சேரி 605110. ர.புஷ்பலதா, 57, மாரியம்மன் கோவில் தெரு, மேரி உழவர்கரை, புதுச்சேரி 10. வீ.நல்குணா, 3, பாலத்துவீதி, முத்தமிழ் நகர், உருளையன்பேட்டை, புதுச்சேரி - 13. ஜெ. தேன்மொழி, 3, நடுத்தெரு, வெண்ணிலா நகர், புதுச்சேரி - 13. அ.காமாட்சி, 65, பாரதிதாசன் வீதி, ஆர்.கே.நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி. ஏ.கல்யாணி, 21, கோட்ரஸ் தெரு, பெரியபேட், கரையாம்புத்தூர், புதுச்சேரி 605106. வலைதள பொறுப்பாளர்கள் - வீ.சூர்யா, 3, ஆற்றங்கரை வீதி, நோணாங்குப்பம், புதுச்சேரி. புஷ்பலதா, 79, 3-வது மெயின் ரோடு, செல்வா நகர், உறவையாறு, வில்லியனூர், புதுச்சேரி.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

வலைதள பொறுப்பாளர்கள் - மல்லிகா ராமகிருஷ்ணன், 18 வது வார்டு கவுன்சிலர், காஞ்சிபுரம். புவனேஸ்வரி, நாகலூத்து தெரு, காஞ்சிபுரம்.

**கோயம்புத்தூர் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.அனிதா தேவி, 82-13, சௌடாம்பிகை நகர், 7வது வீதி, சிவாஜிகாலனி, கோயம்புத்தூர் - 641030 வி.தேவகி, 42டீ, யூனியன் பாங்க் ரோடு, 2வது வீதி, பெரியநாயக்கன்பாளையம், எஸ்.ஆர்.கே.வி போஸ்ட், கோயம்புத்தூர் 641020. எஸ்.எம்.சர்மிளா, 61, தனுஶ்ரீ கார்டன், சுண்டக்காமுத்தூர், கோயம்புத்தூர் 641010.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - ரேவதி அசோக், ஈ. டபிள்யு.எஸ்.96, டி.என். ஹெச்.பி காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி 627007.

துணை அமைப்பாளர்கள் - பூங்கனி ஆறுமுகம், 94 சி, சத்யா தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. எஸ். சொர்ணலதா, 33, ஸ்டேட் பேங்க் நியூ காலனி, ஜெபா கார்டன் அருகில், பெருமாள்புரம், திருநெல்வேலி.

**வேலூர் மாவட்டம்**

துணை அமைப்பாளர் - செ. உத்திரகுமாரி செல்வம் சிந்த கணவாய் பி.டி மோட்டூர், கமலாவுரம் அஞ்சல், போர்ணாம்பட்டு தாலுகா வேலூர்.

---

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **ஜெ. ஹெலன்டேவிட்சன்,** |
| சென்னை - 18. | செயலாளர் |
| நாள் : 26-10-2023 | தி.மு.க. மகளிர் அணி |

### திமுக மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு திமுக மகளிர் தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - சத்தியா, 31,பிள்ளையார் கோவில் தெரு, கலிதீர்த்தாள்குப்பம், புதுச்சேரி.

துணை தலைவர் - ரா.விஜயலட்சுமி, 33, பாரதிதாசன் வீதி, கோவிந்தசாலை, புதுச்சேரி - 11.

அமைப்பாளர் - **ரா.சுமதி**, 82, செல்வவிநாயகர் நகர், கரிக்கலாம்பாக்கம், புதுச்சேரி

துணை அமைப்பாளர்கள் - ரா. சுமித்ரா, 62, நடுத்தெரு, பிள்ளையார் குப்பம், வில்லியனூர், புதுச்சேரி 605502. க. ஜெயபாரதி, 65, பிள்ளையார் கோவில் வீதி, கூனிச்சம்பட்டு, திருக்கனூர், புதுச்சேரி. கு.குப்பம்மாள், 12, அன்னை பிரிதயதர்ஷினி தெரு, ஜீவானந்தபுரம், இலாசுட்பேட்டை, புதுச்சேரி 605008. ஜோ.கஸ்தூரி, 20, பிடாரி அம்மன் கோவில் தெரு, குருவிநத்தம் பாகூர், புதுச்சேரி 607402 மு. அரசம்மாள், 63, காவல்காரன் கோவில் தெரு, கூனிச்சம்பட்டு, திருக்கனூர், புதுச்சேரி. சு.ராஜலட்சுமி, 51, விநாயகர் கோவில் தெரு, வி.மணவெளி, வில்லியனூர், புதுச்சேரி 605110. பா. சித்ரா, 3, பள்ளிக்கூடத் தெரு, கோவிந்தசாலை, புதுச்சேரி - 11. த.புவனேஸ்வரி, 54 சி, மாரியம்மன் கோவில் தெரு, பெரியப்பேட், வில்லியனூர், புதுச்சேரி 605110. செ. தைலம்மை, 33, அண்ணா நகர்,. ஒதியம்பட்டு, புதுச்சேரி 605110.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

வலைதள பொறுப்பாளர்கள் - பரமேஸ்வரி, விச்சந்தாங்கல், களக்காட்டூர், காஞ்சிபுரம். சூர்யா, புண்ய கோட்டீசுவன் தெரு, சின்ன காஞ்சிபுரம்.

**கோயம்புத்தூர் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஏ.மோகனசுந்தரி, 9, பொங்கியம்மாள் நகர் முதல் கவுண்டம்பாளையம் கோயம்புத்தூர் - 641030 ஆர்.ஆல்வின் மேரி, 44, ஞான இல்லம், ஐ.டி.ஐ பின்புறம், திருவள்ளுவர் நகர், ஜி.என்.மில்ஸ், கோயம்புத்தூர் 641029. வீ.நாகரத்தினம், 3/65, காளட்டியூர், சிக்கராம்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் 641004.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜோதிப்பிரியா, 4, ஒட்டகூத்தர் தெரு, பாட்டப்பத்து டவுன், திருநெல்வேலி. பி.மாரியம்மாள், 109/டி, வி.வி.கே. தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004

---

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **நாமக்கல் ப.இராணி,** |
| சென்னை - 18. | செயலாளர் |
| நாள் : 26-10-2023 | தி.மு.க. மகளிர் தொண்டர் அணி |

## 26ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2023

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்**
**கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்**
**என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தக்குமார், பூச்சி எஸ். முருகன்**

மகள்கள் : **ஸ்ரீமதி பேபி (எ)** அன்புத்தங்கை **ஸ்ரீமதி வடிவு, ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி**

மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்

### த.விக்னேஸ்வரன் தலைமை! எஸ்.முரளி - நந்தனம் கி.மதி முன்னிலையில்

# 125வது வட்டத்தில் இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, அக். 28-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமையில் இன்று (28-10-2023) காலை 10 மணியளவில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி 125வது வட்டம் கயிலாசபுரம், ஆறுமுகம் தெரு, ஏகாம்பரம் தெரு, முனுசாமி தெரு, மீணாம்பாள்புரம், ரூதர்புரம், நொச்சி குப்பம், நொச்சி நகர் ஆகிய பகுதிகளில் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் மதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், 125வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், எஸ்.உமாசங்கர், டேண்டி பிரகாஷ், அஷ்வின் ஆகியோர் வரவேற்பில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல். தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார் வட்ட கழக செயலாளர்கள் ஏ. தாஸ், மா.பா.அன்பு, வி.வெற்றிவேல், கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

# (நான்காவது பட்டியல்)

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அரியலூர் மாவட்டம்**

தலைவர் - முனைவர் ஆ. அருள், பெரியார் நகர், நெய்வணம் செந்துறை ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - முனைவர் ஜெகநாதன், செட்டித்திருக்கோணம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

அமைப்பாளர் - **ஜான் வின்சென்ட் ராஜா**, ஸ்ரீராம் நகர், திருமானூர், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - பாலமூர்த்தி, சன்னாவூர், திருமானூர் ஒன்றியம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். கோபி, நந்தியன்குடிகாடு செந்துறை வட்டம் அரியலூர் மாவட்டம். திருக்குமரன், கோட்டைவாசல், உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம். அசோக், பூக்காரத்தெரு, அரியலூர், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். கௌதம், இராயம்புரம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். செ. மணிமொழி, அழகாபுரம் அஞ்சல், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர் - எம். பாருக், 138, இரணியன் நகர், சீர்காழி.

துணைத் தலைவர் - தங்க. இரவீந்திரன், சிவன்கோவில், கீழத்தெரு, தேரழுந்தூர்-609808.

அமைப்பாளர் - **வி. சௌமியன் ,** 83, குறிஞ்சி தெரு, திருவள்ளுவர் நகர், (பாண்டியன் தோப்பு), மயிலாடுதுறை-609001.

துணை அமைப்பாளர்கள் - எ.ஜி. இளங்கோவன், 33, நகராட்சி மருத்துவமனைத் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை 609 001. வி.எஸ். திருமூர்த்திராஜன், அபிஷேக்கட்டளை தெரு, திருக்கடையூர், தரங்கம்பாடி (Tk). கே. மகேஷ், 4-169, கீழையூர், மகாராசபுரம், மயிலாடுதுறை. எஸ். இரமேஷ், 3/134, மாரியம்மன், கோவில் தெரு, திருவெண்காடு அஞ்சல். ஆர். உதயராமன், மேலத்தெரு, சோழம்பேட்டை, மயிலாடுதுறை. எம். கருணாகரன், 3/149, பசும்பொன் தெரு, பொன்னிநகர், சீனிவாசபுரம், மயிலாடுதுறை-609301. ம. ஜீவானந்தம், மந்தைவெளித்தெரு, 4, கடலங்குடி, வானதிராஜபுரம் அஞ்சல், குத்தாலம் தாலுக்கா, மயிலாடுதுறை. எஸ்.வி.ஆர். திருச்செல்வன், 57/14, வ.வு.சி. கிழக்குதெரு, தென்பாதி. ஜெ. சதீஷ், மெயின்ரோடு, கொள்ளிடம் அஞ்சல், சீர்காழி தாலுக்கா. சி. ராமன், 3/132, மீனவர் காலனி, புவனகிரி, சீர்காழி தாலுக்கா.

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - **இரா. ரத்தினகுமார்,** 8, 4வது தெரு, பெரியார் நகர், இரும்புலியூர், சென்னை-600045. துணை

துணை அமைப்பாளர்கள் - **த. கணேஷ்**, 15, திருவள்ளுவர்பேட்டை, அனகாபுத்தூர், சென்னை-600 070. எ. சங்கர், 26, 4வது தெரு, யஷ்வந்த் நகர், மாடம்பாக்கம், சென்னை-600126. பு.ந. ராஜேஷ்குமார், 28, காந்தி ஜி, 5வது குறுக்கு, மகாசக்தி காலனி, செம்பாக்கம், சென்னை-600073. ப. ரமேஷ், 35, பொன்னியம்மன் கோயில் தெரு, பழைய பல்லாவரம், சென்னை-600117. எம்.ஆர். ராமச்சந்திரன், 39, இந்திரா நகர், பாரதமாதா தெரு, சிட்லபாக்கம், சென்னை-600047.

**திருப்பூர் வடக்கு மாநகரம்**

அமைப்பாளர் - **டி.கே. தண்டபாணி,** 340, செல்லம்மாள் காலனி, சாமுண்டிபுரம், திருப்பூர்-641603.

துணை அமைப்பாளர்கள் - க. குமார், கூலிபாளையம், வாவிபாளையம், திருப்பூர்-641666. பி.பாலசுப்ரமணியம், 35, டி.எஸ்.ஆர். லேஅவுட் 2-வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607. ர. வேலுச்சாமி, 1-பிச்சம்பாளையம், விரிவு 1-வீதி, காந்திநகர், திருப்பூர்-641603. க. சண்முகம், 8/151-பி, அம்மன் நகர், பூலுவபட்டி, திருப்பூர்-641602. க. ஈஸ்வரன், நாகாத்தம்மன் கோவில் வீதி, சாமுண்டிபுரம், காந்திநகர், திருப்பூர்-641603.

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

அமைப்பாளர் - **கேபிள் விஜய் (எ) எஸ்.விஜயகுமார்,** 25, கொங்கணகிரி, 4-வீதி, காலேஜ் ரோடு, திருப்பூர்-641602.

துணை அமைப்பாளர்கள் - நே. ராஜேஷ்குமார், 345 கே.என்.பி. சுப்ரமணி நகர், நல்லூர், திருப்பூர்-641604. எஸ். டி. பாரதிராஜா, எ/100, குளத்துப்பாளையம், வீரபாண்டி, திருப்பூர்-641605. ச. சுரேஷ் குமார், 2/283, வீரபாண்டி, மெத்தகடை, வீரபாண்டி, திருப்பூர்-5. வீ. பிரபு, ஜெ.ஜெ. நகர் முதல் வீதி, வீரபாண்டி, திருப்பூர்-641605. கோ. சக்திவேல் 316, கே.என்.பி. சுப்ரமணி நகர், நல்லூர், திருப்பூர்-641604.

**நாகர்கோவில் மாநகரம்**

தலைவர் - சு. ரவிச்சந்திரன், 17, தோப்பு வணிகர் நடுத்தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629001.

துணைத் தலைவர் - ரா. கணேசன், 3/33, லைப்ரரி தெரு, கரியமாணிக்கபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் - **ரெ. சகாய மைக்கேல் ராஜன்,** 2-156சி, சர்ச் தெரு, பள்ளவிளை, பெருவிளை அஞ்சல், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629003.

துணை அமைப்பாளர்கள் - சொ. ராஜா (எ) சுதேசன், 1/117, பிள்ளையார் கோவில் தெரு, செட்டி தெரு, பறக்கை, கன்னியாகுமரி மாவட்டம். த. குமார், 149, அறுகுவிளை, அறுகுவிளை மெயின் ரோடு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். ஆன்றனி பபின், 266, கென்னடி தெரு, ராமன்புதூர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். எஸ். எஸ். அனிஷ் குமார், 2/122, புதுகாலனி, புளியடி, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். வ. வீரவாகு, 38, கம்பளம் ரோடு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் - நெல்லையப்பன், 31, தெப்பகுள கீழ தெரு, திருநெல்வேலி டவுண்.

துணைத் தலைவர் - எஸ். ராஜேஷ், 27, செல்வி நகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி ஜங்ஷன்.

அமைப்பாளர் - **எம்எஸ்பி. சரத் மணி,** ஏ/53, 5வது குறுக்குத்தெரு, என்.ஜி.ஓ. ஏ காலனி, பெருமாள்புரம். எல். பாலசுப்பிரமணியன், 29, எஸ்டி.சி, 1வது தெரு, பெருமாள்புரம், பாளையங்கோட்டை. சி. முத்துகுமார் , சி.19, ஆதிபராசக்தி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. அன்னராஜா, 17/2, பெருமாள் தெற்கு ரதவீதி, திருநெல்வேலி சந்திப்பு. ஜே. ஸ்ரீராம், 633, காவேரி சாலை, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி டவுண். பி. சுடலைகண்ணு, 19, ஆர்.எஸ்.ஏ. நகர், கரையிருப்பு, திருநெல்வேலி.

**காஞ்சிபுரம் மாநகரம்**

தலைவர் - வீனஸ் உதயகுமார், சுக்கலாபாளையம் தெரு, காஞ்சிபுரம்.

துணைத் தலைவர் - ஆர். வெங்கடேசன், வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம்.

அமைப்பாளர் - **என். மாதவன்,** 434,மெயின் ரோடு, திருகாளிமேடு, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - இ. பன்னீர்செல்வம், 41/12, எண்ணெய்கார தெரு, காஞ்சிபுரம். ஜி. குமரன், அம்மன் கரை, காஞ்சிபுரம். ஜி.எல். கோவிந்தராஜ், அண்ணாதெரு, காஞ்சிபுரம். ஆர்.கே. செந்தில், 158, செங்கழுநீரோடை வீதி, காஞ்சிபுரம். எஸ். நம்பி வஜ்ஜிரவேல், நெ.73, கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெரு, காஞ்சிபுரம்.

**கரூர் மாவட்டம்**

தலைவர் - இரா. வேலுச்சாமி, 96, காளிப்பனூர் மேற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாந்தோனிமலை அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639007.

துணைத் தலைவர் - எம். பாஸ்கரன், 25/12, பெரியபுதூர், மேல் ஓரத்தை அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639113.

அமைப்பாளர் - **கே. நல்லுசாமி,** 385, ராமாகவுண்டன்புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639005.

துணை அமைப்பாளர்கள் - ஒ.கே. சத்தியமூர்த்தி, 85, ஓலப்பாளையம், புன்னம்சத்திரம் அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639136. அ. திருமுருகன், 7-3சி, ஊத்துப்பட்டி, பாதிப்பட்டி அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் - 621313. வே. செல்வம், 1/107, கந்தசாரப்பட்டி, மூக்கணாங்குறிச்சி, மூக்கணாங்குறிச்சி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639118. வி. வேலுச்சாமி 25/179, சின்ன மூக்கணாங்குறிச்சி, மூக்கணாங்குறிச்சி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639118. பி. சிவாஜி, 1/95, வேலாயுதம்பாளையம், வெள்ளப்பட்டி அஞ்சல், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639119.

**சிவகாசி மாநகரம்**

தலைவர் - ரவிக்குமார், 379/1, வடக்கு ரத வீதி, திருத்தங்கல்.

துணைத் தலைவர் - அஜய்குமார், சி325, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல்.

அமைப்பாளர் - **செல்வராஜ்,** 815, ஜவஹர்லால் நேரு ரோடு, பராசக்தி காலனி, சிவகாசி.

துணை அமைப்பாளர்கள் - காளிராஜன், 591, பராசக்தி காலனி 2வது தெரு, சிவகாசி. ஸ்ரீதர், 130, பாண்டியன் நகர், 4வது தெரு, திருத்தங்கல். வீரபுத்திரன், 967/106/21, பி. கே.எஸ்.ஏ. ஆறுமுகம் ரோடு, சிவகாசி. செல்வக்குமார், 15, சுப்பு நாடார் சந்து, திருத்தங்கல். முத்துப்பாண்டி, 39, சிவகாசி-விருதுநகர் மெயின் ரோடு, திருத்தங்கல்.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - அரங்க பன்னீர்செல்வம் , 24, பள்ளிக்கூட வீதி, தேங்காய்த்திட்டு, புதுச்சேரி-4.

துணைத் தலைவர் - ஞா. நவீன் (எ) மணிகண்டன், 4,பராதிதாசன் வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி-605003.

அமைப்பாளர் - **த. முகிலன்,** 27, 3-வது குறுக்குத் தெரு, மோகன் நகர், புதுச்சேரி-605005.

துணை அமைப்பாளர்கள் - ச. அரிதாஸ், 33, ரெட்டியார் வீதி, இராமநாதபுரம், புதுச்சேரி-605502. ஜெ. பாலு, 36, திருக்குறளார் நகர், 2-வது குறுக்குத் தெரு, அரும்பார்த்தபுரம், புதுச்சேரி-605110. சா. சுரேஷ், 254, சுப்பையா நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி. த. கார்த்திக், 29, முல்லை தெரு, காமராஜர் நகர், கோரிமேடு, தன்ந்திரி நகர், புதுச்சேரி-605006. எ. பிரபு , 8, 3-வது குறுக்குத் தெரு, காந்தி நகர், புதுச்சேரி-605009. ரா. பாலசண்முகம், 4, 2-வது குறுக்குத் தெரு, திரு.வி.க. நகர், முதலியார்பேட்டை, புதுச்சேரி. ப. கணேசன், பிள்ளையார் கோவில் தெரு, திருபுவனைப் பாளையம், புதுச்சேரி-605107. மு. முத்தரசன், 4-பி, சங்கரதாஸ் தெரு, ராஜ்பவன், புதுச்சேரி-605001. பெ. வெங்கடேசன், 4, பெருமாள் கோவில் தெரு, கவுண்டம்பாளையம், புதுச்சேரி-9.

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - **பி. ராஜராஜசோழன்,** எண்.6, ராமசாமி நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - த. ராஜலெட்சுமி, 19 பி, சிவாஜி நகர், தஞ்சாவூர். வி. பலராமன், 42/1336, பாலோபா சந்து, மேலவீதி, தஞ்சாவூர்.

தி. ரெங்கசாமி, 17, 10ம் தெரு, அண்ணா நகர், விளார் சாலை, தஞ்சாவூர். த.பாலசுப்ரமணியன், 363, முல்லை தெரு, புதிய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர். எஸ்.எம். சடகோபன் ராமானுஜம், 23, கீழத்தெரு, பள்ளியக்கிருஹாரம், தஞ்சாவூர்.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜி.கே. இராஜா, 4/205, மேல்சோமர்பேட்டை கிருஷ்ணகிரி மாவட்டம். மா. சூரியபிரகாசம், இராமேநத்தம், தேவர்முக்குளம் அஞ்சல், காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. கே.பி. சண்முகம், 3/22, சவுளூர் கூட்ரோடு, காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. எஸ். பாலாஜி, 97/44, ஆர்.எஸ். லட்சுமிபுரம், கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி மாவட்டம். ஆர். குமரேசன், தொகரப்பள்ளி கிராமம், பர்கூர், கிருஷ்ணகிரி. பி. தீபன்ராஜ் 1/8, தளிஅள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பி. செந்தில்குமார், 1/71, வடக்குத் தெரு, காரனை மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்

**தருமபுரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - **கே. தீர்த்தராமன்,** 1/183, வெங்கட்டம்பட்டி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி.

---

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **கார்த்திகேய சிவசேனாபதி** |
| சென்னை - 18. | செயலாளர் |
| நாள் : 26-10-2023 | தி.மு.க. சுற்றுச்சூழல் அணி |




கழகத்தின் வாழும் வரலாறுகளாய் திகழும் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிப்பதை தான் செல்லும் மாவட்டங்களில் எல்லாம் வழக்கமாக கொண்டுள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் 2 ஆயிரம் மூத்த கழக முன்னோடிகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழியை வழங்கினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தனுஷ்குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், செ.தங்கப்பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.




தி.மு.கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர்களும், அமைச்சர்களுமான கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், செ.தங்கப்பாண்டியன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளனர்.

# உடன்பிறப்பே... 29

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த கா.வேழவேந்தன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# கா.வேழவேந்தன் கழகத்தின் மூத்த கவிஞர்

எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் என அறிவாற்றலுடன் களம் கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காலம் தொடங்கி, இன்று ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் கழகம் அமர்ந்துள்ளது வரை கழகத்தின் உயிர்நாடியாக உள்ளது அறிவாற்றலால்தான். அதனால்தான் கழகத்தின் தலைமையகத்துக்கு அண்ணா அறிவாலயம் எனப் பெயர் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர். இன்று பேனா என்கிற அடையாளம் கலைஞரின் இருப்பாகவும், கழகத்தின் துடுப்பாகவும் திகழ்கிறது. அந்த வரிசையில் எழுத்தாயுதம் ஏந்திய உடன்பிறப்பாக கா.வேழவேந்தன் திகழ்கிறார்.


திராவிட இயக்கத் தலைவர்கள் மிக வீச்சாக அரசியல் களமாடிக் கொண்டிருந்த காலத்தில், தற்போது, தமிழ்நாட்டில் வட எல்லையாக உள்ள கும்மிடிப்பூண்டி அருகே உள்ள காரணி எனும் ஊரில், 1936-ஆம் ஆண்டு பிறந்தவர் கஜேந்திரன். பெற்றோர் கா.சின்னசாமி - இராசம்மாள். இவர்கள் கஜேந்திரன் என பெயர் சூட்டிய பிள்ளைதான் பின்னாட்களில் தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் கொண்டு தனது பெயரை 'வேழவேந்தன்' என மாற்றிக் கொண்டது.

## நாத்திகப் போராட்டம்!

தமிழ்நாட்டு இளைஞர்கள் இனப்பற்றுக் கொண்டு தீவிர அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலங்களில் பிறந்தவர் என்பதால், அப்போது காணும் இடம் எல்லாம் அரசியல் பேச்சாகவே இருக்கும் சூழலில்தான் இவர் வளர்ப்பும் அமைகிறது. திண்ணைப் பள்ளிக்கூடம் முடித்த அவர், 1948-ஆம் ஆண்டில் சென்னை, சௌகார்பேட்டையில் உள்ள இந்து தியாலஜிக்கல் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வகுப்பில் சிறந்த மாணவராக இருந்தாலும், அந்தப் பகுதியில் குழுமி செயல்பட்ட அறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் தொடர்பு கிடைக்க, திராவிட இயக்கப் பற்றாளராக மாறினார்.

பள்ளியில் கடவுளை வணங்க மறுப்பது, திருநீறு பூசிக் கொள்ள மறுப்பது என இவரது செயல்பாடுகள் முழுமுற்றாக பகுத்தறிவு, நாத்திகச் சிந்தனைக்கு ஈடுபடுத்திக் கொண்டது. அப்போதே தமிழ்ப்பற்று, ஆர்வம் காரணமாக இலக்கிய இதழ்களில் எழுதத் தொடங்குகிறார். அப்போதுதான், தனது கஜேந்திரன் என்கிற பெயரை வேழவேந்தனாக மாற்றிக் கொண்டார். அதன் பின்னர் இளங்கலை தமிழ்ப்பட்டம் படிக்க, 1956-59 ஆண்டுகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு வந்தார். அங்கு தமிழ் மன்றத் தலைவராகவும், அனைத்துக் கல்லூரிகள் தமிழ்ப்பேரவைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரது தமிழார்வமும், அரசியல் ஆர்வமும் அவரை 'திராவிட நாடு', 'முரசொலி', 'குயில்', 'தென்றல்', 'தென்னகம்', 'காவியம்', 'இலக்கியம்' எனப் பல இதழ்களுக்கும் பங்களிப்புச் செய்ய வைத்தது. கல்லூரிப் படிப்புக்கு அடுத்து சட்டமும் பயின்றார் வேழவேந்தன். அப்போதே அண்ணா தலைமையில் வேழவேந்தன் கவிதைகள் தொகுப்பை வெளியிட்டு பெயர் பெற்றவர்.



ஓவியம் : ரவி பேலட்

**அவரது உடலுக்கு முதலமைச்சராக சென்று மரியாதை செய்தார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். பாராட்டுகள், விருதுகள் எனக் கவிஞர் வேழவேந்தன் கொண்டாடப்பட்டாலும், கருப்பு சிவப்பு அடையாளம் மாறாத உடன்பிறப்பு என்பதில் காலமெல்லாம் உயிர்த்திருப்பார்.**

## இலக்கியமும் கழகமும்

அந்தக் காலகட்டங்களில் கழகத்தில் இணைந்த அவர், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தீவிரமாக கலந்துகொண்டார். சட்டமும் தமிழார்வமும் மிக்க இளைஞராக இவரது ஆற்றல்மிக்கச் செயல்பாடுகளால் கலைஞர், பேராசிரியர், நாவலர் ஆகியோராலும் அரவணைக்கப் பட்டார் வேழவேந்தன்.

இவரது கழகப் பற்றும், அறிவாற்றலும் சட்டமன்றத்துக்குப் பயன்படும் என 1967- ஆம் ஆண்டு தேர்தலின்போது கும்மிடிப்பூண்டி தொகுதியில் வேட்பாளராக நிற்பதற்கு வாய்ப்பு அளித்தார் பேரறிஞர் அண்ணா. தனது 31 வயதில் சட்டமன்றத்தில் நுழைந்த அவர், பேரவையின் சிறப்புரிமைக் குழு உறுப்பினர், விதிகள் குழு உறுப்பினர் எனப் பொறுப்புகளை வகித்தவர்.

குறிப்பாக, அண்ணா தனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றிய, காலத்தின் கல்வெட்டாக நிலைத்து நிற்கும் சுயமரியாதைத் திருமணச் சட்டத்தினை ஆராய்ந்த கூட்டுக்குழு உறுப்பினர்களில் வேழவேந்தனும் ஒருவராக இருந்தார்.

கழகத்தின் சென்னை மாவட்டச் செயலாளராக இருந்த கே.எம்.கண்ணபிரான் அவர்களின் மகளான பானுமதியை மணந்தவர் என்பதுடன், திருமணத்தை அண்ணாவே தலைமையேற்று நடத்தி வைத்தார். அந்த அளவுக்கு, அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமான தம்பியாகத் திகழ்ந்தவர் வேழவேந்தன்.

அண்ணாவுக்குப் பின் அதே அரவணைப்புடன் கலைஞரின் நெருக்கமான உடன்பிறப்பாகவும் வலம் வந்தவர். கலைஞர் முதன்முதலில் முதல்வரானபோது தொழிலாளர் நலன் அமைச்சராக அவரது ஆற்றலுக்குப் பரிசளித்தார் கலைஞர். அவர் பொறுப்பில் இருந்தபோதுதான், மே 1 -ஆம் தேதி தொழிலாளர் தினத்துக்கு அரசு விடுமுறை என வரலாற்றுச் சிறப்புக்கு மேலும் சிறப்பு சேர்த்தார் வேழவேந்தன். 1970-ஆம் ஆண்டில் ஜெனீவாவில் நடைபெற்ற 54-வது பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டில், தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்டு கவனிக்கத்தக்க உரையாற்றியவர் வேழவேந்தன்.

## மே நாள் விடுமுறை

1971-ஆம் ஆண்டில், மீண்டும் கும்மிடிப்பூண்டி தொகுதியில் இருந்து தேர்வானவரை, சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக்கினார் கலைஞர். இளவயதில் பல்வேறு பொறுப்புகளை வழங்கி, அதில் முத்திரைப் பதிக்க, கலைஞரின் வழிகாட்டுதல் என்றைக்கும் வேழவேந்தனுக்குக் கிடைத்து வந்தது. மிசா நெருக்கடியின்போது சிறையில் இருந்த இவருக்கு, சிறைத் தோழமையாக இருந்தவர் அப்போது 'விடுதலை' இதழின் நிர்வாக ஆசிரியராகவும், தற்போது திராவிடர் கழகத்தின் தலைவராகவும் இருக்கும் ஆசிரியர் வீரமணி அவர்கள். தந்தை பெரியார் இருந்தபோது, அவரது கடைசிப் பிறந்தநாள் விழாவில், பெரியார் முன் கவிதை வாசித்த பெருமை பெற்றவர் வேழவேந்தன்.

## இலக்கியப் புரவலர்

கழகத்தின் வட எல்லை முகமாகவும், அனைத்துப் போராட்டங்களின் முனையாகவும் நின்றவர் வேழவேந்தன். கழகத்தின் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர், இலக்கிய அணித் தலைவர், புரவலர், துணைப் பொதுச் செயலாளர், தொழிற்சங்கப் பொறுப்புகள் எனக் கழகத்தின் பல பொறுப்புகளில் இருந்தவர். தனது அரசியல் பணிகளுடன் இலக்கியப் பணிகளுக்கும் நேரம் ஒதுக்கிய அவர், 'வண்ணத் தோகை', 'ஏக்கங்களின் தாக்கங்கள்', 'தமிழா? அமிழ்தா?', 'அண்ணாவும் பாவேந்தரும்' என நூற்றுக்கும் மேற்பட்ட கவிதை, கட்டுரைத் தொகுப்புகளைக் கொண்டு வந்துள்ளார்.

இளையோருக்கு வழிவிடும் விதமாக கள அரசியல் செயல்களைக் குறைத்துக் கொண்டு எழுத்துப் பணிகளில் கரைத்துக் கொண்ட அவரை, 2009-ஆம் ஆண்டில் தமிழ் அறிவியல் மன்றத்தில் தலைவராக நியமித்தார் கலைஞர். தமிழைச் செம்மொழியாக அறிவிக்க, கலைஞரின் முயற்சிகளுக்குப் பக்கபலமாகத் தமிழறிஞர்களுடன் பாலமாகத் திகழ்ந்தவர் வேழவேந்தன்.

மரபுக்கும் நவீனத்துக்கும் பாலமாக திகழ்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த மூத்த கவிஞர், 2022-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி, தனது 86 வயதில் வயதுமூப்புக் காரணமாகக் காலமானார். அவரது உடலுக்கு முதலமைச்சராக சென்று மரியாதை செய்தார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். பாராட்டுகள், விருதுகள் எனக் கவிஞர் வேழவேந்தன் கொண்டாடப்பட்டாலும், கருப்பு சிவப்பு அடையாளம் மாறாத உடன்பிறப்பு என்பதில் காலமெல்லாம் உயிர்த்திருப்பார்.

...துடிக்கும்

## ரிப்பேரான டிஜிட்டல்!

ஒன்றிய பா.ஜ.க. தனது சாதனைகளில் ஒன்றாக 56 அங்குல மார்பில் தட்டிக் கொள்வது, 'டிஜிட்டல் இந்தியா' என்ற வெள்ளைக் காகிதத்தைத்தான். ஆம், அதில் ஒன்றுமில்லை. அப்படியே குப்பையில் போட வேண்டிய ஒன்றுதான். அதை நிரூபிக்கும் விதமாக, கேரளத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. அந்த மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள அஞ்சல் அலுவலகம் ஒன்றில், ஆனந்த் என்ற நபர் தன் கணக்கு விஷயமாகச் சென்றிருக்கிறார். அங்கே சென்றவருக்கு அதிர்ச்சி. காரணம், அங்கிருந்த தகவல் பலகையில், 'பணப் பரிவர்த்தனை ரொக்கமாக மட்டுமே மேற்கொள்ளப்படும்' என்ற நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. அதனால் அவர், 'டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஏன் மேற்கொள்வதில்லை? அதற்கான காரணம் என்ன? டிஜிட்டல் இந்தியா என்று கோடிக்கணக்கில் செலவழிக்கிறீர்களே?' என்றெல்லாம் தன் 'எக்ஸ்' தளத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய அஞ்சல் துறை அளித்த விளக்கம்தான் பேரதிர்ச்சி. 'மன்னிக்கவும். தவறு நேர்ந்துவிட்டது. அந்த நோட்டீஸ் அகற்றப்பட்டுள்ளது. அஞ்சல் அலுவலகங்களில் அதுபோல நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தால், அவற்றை நீக்க உத்தரவிட்டுள்ளோம்' என்று அவருக்கு பதில் அளித்திருக்கிறது. நோட்டீஸை அகற்றுவது தானா சார் உங்க டிஜிட்டல் டக்கு..? என மக்கள் விமர்சித்து வருகின்றனர்.

## :ப்ளாஷ்பேக்



## பெரியார் கிராமம்!



விக்னேஷ்

திருச்சி மாவட்டம், லால்குடியிலுள்ள இடையாற்று மங்களம் என்ற எங்கள் கிராமம் தான் திருச்சியில் பெரியார் அதிகம் வருகை தந்த கிராமமாக அறியப்பட்டது. அதன் நினைவாக எம்.ஆர்.ராதா அவர்களால் 'பெரியார் பூங்கா' ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அதே ஊரில் 1960-செப்டம்பர் 8 அன்று என் பெரியப்பா முத்து செழியன் அவர்களுக்கும் பெரியம்மா சாந்தாம்மாள் அவர்களுக்கும் தந்தை பெரியார் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அதற்குப் பிறகு என் தந்தை தொடங்கி அனைவரது திருமணமும் சுயமரியாதைத் திருமணங்கள்தான். சுயமரியாதைத் திருமணத்துக்குச் சட்ட அங்கீகாரம் கிடைக்காத 1960 ஆம் ஆண்டு பெரியார் என்ற ஒருவர் தலைமை தாங்கியதால் மட்டும் இப்படியான திருமணம் நடைபெற்றது என்பதை என் குடும்ப முன்னோடிகள் கூறியுள்ளனர்.

**-விக்னேஷ், லால்குடி தெற்கு ஒன்றியம், திருச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆளுநரின் நேர்மை!

**1991-ஆம் ஆண்டு மக்களுக்குப் பெரும்பயன் விளைந்திடும் முற்போக்குத் திட்டங்களைச் செயற்படுத்தி, அறவழியில் நடைபெற்ற கழக ஆட்சியை – ஆளுநரின் மறுப்பையும் மீறி, டெல்லி அரசு கலைத்தது. அரசுக் கலைப்பு ஆணையில் கையெழுத்திட மறுத்த ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவுக்கு கழகம் நினைவுப் பரிவு வழங்கி, மரியாதை செய்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 283




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131